
Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/940)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 02 திங்கட்கிழமை (19.09.2011) பக்கங்கள் 16 ஓசை – 355




இலங்கை முன்னேற்றம் (07)



உரிமை மீறல் வேண்டும் அக்கறை (09)




கூட்டணிக்குள் லடாய்! (12)



வெட்டுக்கு வெட்டு (14)

## சிரேஷ்ட ஊடகவியலாளர் விவேகராசா காலமானார்



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் பிரபல ஊடக வியலாளரும் மூத்த ஊடகவியலாளருமான தம்பு விவேகராசா (வயது 53) சனிக் கிழமை நள்ளிரவு வவுனியா வைத்திய சாலையில் மரணமானார்.

கடந்த 10 நாட்களாக சுகவீனமுற்ற நிலையில் வவுனியா பொது வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே மரணமானார். தம்பு விவேகராசா கடந்த 30 வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் கடமையாற்றி வருவதோடு வன்னி ஊடகவிய லாளர் சங்கத்தின் செயலாளராகவும் கடமையாற்றி வந்தார். மூத்த ஊடகவியலாளர் தம்பு விவேகராசா பத்திரிகைகளுக்கும் இணைய ஊடகங்களுக்கும் சர்வதேச (15 ஆம் பக்கம் பார்க்க)

## வாள்வெட்டில் குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் ஈவி னைப் பகுதியில் இரண்டு பிள் ளைகளின் தந்தையான இளம் குடும்பஸ்தர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி நேற் றைய தினம் உயிரிழந்துள்ளார்.

தர்மலிங்கம் ஜெயந்திரா (வயது 30) என்ற என்ற குடும் பஸ்தர் நேற்றுமுன்தினம் மதி யம் வீட்டை விட்டு வெளியே சென்றுள்ளார். பின்னர் தோட் டக் காணியினுள் வைத்து வெட்டப்பட்ட நிலையில் இரவு 7.30 மணியளவில் வீட்டுக்குத் (15 ஆம் பக்கம் பார்க்க)


## சுதந்திர ஊடக குரல் யாழில் அங்குரார்ப்பணம்



(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு எதிராக ஜனநாயக முறையில் நடவடிக்கை எடுக்கும் வகையில் சுதந்திர ஊடக குரல் எனும் ஊடக அமைப்பு யாழ்ப்பாணத் தில் நேற்றைய தினம் அங் குரார்ப்பணம் செய்யப்பட்டது. (15 ஆம் பக்கம் பார்க்க)

# பான் கீ மூனுக்கு எதிராக இலங்கை போர்க்கொடி



## நிபுணர் குழு விடயத்தில் இராஜதந்திர வழிமுறைகளை மீறியதாகக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அடிப்படையான இராஜதந்திர வழிமுறை களை பின்பற்றத் தவறி விட்டதாக குற்றம்சாட்டி, ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூனுக்கு கண்ட னக் கடிதம் ஒன்றை அரசாங்கம் அனுப்பவுள்ள தாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசுக்கு முன்கூட்டியே அறிவிக்காமல், ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கையை மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பி வைத்த விவ காரத்திலேயே ஐ.நா. செயலர் பான் கீ மூனுக்கு எதிராக அரசாங்கம் திரும்பியுள்ளது.

பான் கீ மூனின் நடவடிக்கையைக் கண் டித்து, காட்டமான கடுமையான வார்த்தைகளி னால் ஆன கடிதம் ஒன்றை அவருக்கு அனுப்பி வைக்குமாறு நியுயோர்க்கில் உள்ள, ஐ.நாவுக் கான தனது வதிவிடப் பிரதிநிதிக்கு அரசாங்கம் பணித்துள்ளது.

பான் கீ மூன் மரபுகளுக்கு மாறாக நடந்து கொண்டுள்ளதை கடுமையாக விமர்சிக்கும் வகை யில் இந்தக் கடிதம் அமைய வேண்டும் என்றும் பாலித கொஹன்னவுக்கு (15 ஆம் பக்கம் பார்க்க)

## புலி உறுப்பினர்கள் சமூகத்துடன் இணைவு

(கொழும்பு)

புனர்வாழ்வு பயிற்சிகள் வழங்கப் பட்ட புலிகள் அமைப்பை சேர்ந்த முன் னாள் உறுப்பினர்களில் மேலும் ஆயிரம் பேர் இந்த மாத இறுதியில் சமூகத்து டன் இணைக்கப்படவுள்ளதாக புனர் வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீர மைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னாள் புலி உறுப்பினர்களை விடு தலை செய்வதற்கு தேவையான அனு மதியை பாதுகாப்பு அமைச்சிடம் கோரி யிருப்பதாக அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க தெரிவித்தார்.

படையினரிடம் சரணடைந்த புலிக ளின் உறுப்பினர்களில் 2000 பேர் தற் போது, புனர்வாழ்வு பயிற்சிகளை பெற்று வருகின்றனர். இவர்களில் ஆயிரம் பேரே சமூகத்துடன் இணைக்கப்படவுள்ளனர் எனவும் திஸாநாயக்க குறிப்பிட்டார்.

ஏனையவர்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் புனர்வாழ்வு பயிற்சிக்கு உட்படுத் தப்பட்டவர்கள் எனவும் அவர்களுக்கு ஒரு வருடகாலம் புனர்வாழ்வு பயிற்சி வழங்கப்படும் எனவும் புனர்வாழ்வு மற் றும் சிறைச்சாலைகள் அமைச்சின் செய லாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சர்வதேசத்தை எதிர்கொள்ள காத்திரமான நடவடிக்கை

### தேவை என்கிறார் கோமின் தயாசிறி



(கொழும்பு)

சர்வதேச அழுத்தங்களுக்கு முகம்கொடுக்கும் வகையில் காத்திரமான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டியது அரசின் கடமையென சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி தெரிவித் துள்ளார். இது தொடர்பாக (15 ஆம் பக்கம் பார்க்க)

## ரயிலுடன் மோதியதில் யாழ். வாசி உயிரிழப்பு

(கொழும்பு)

அநுராதபுரத்தில் நேற்று அதி காலை லொறியொன்று ரயிலுடன் மோதியதில் லொறியின் சாரதி ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கே.வல்லிபுரம் (64) என்பவரே உயி ரிழந்ததாக அநுராதபுரம் பொலி ஸார் தெரிவித்தனர்.

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரஜரட்டன ரெஜின எனும் ரயில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற லொறியுடன் மோதியுள்ளது.

லொறியானது பாதுகாப்புக் கடவையை மீறி ரயில்பாதையை கடக்க முற்பட்டபோதே இவ்விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரி விக்கின்றனர்.



அநுராதரபுரம் மதவாச்சி வீதியிலுள்ள ஹதரஸ் கல்ல எனும் இடத்தில் இவ்விபத்து இடம்பெற்றது. லொறியின் உதவியாளர் லொறியிலிருந்து பாய்ந்து காயமடைந்த நிலையில் அநுராதரபுரம் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## தெரிவுக்குழு பிரதிநிதிகளை நியமிப்பதற்கு கோரவில்லை

### தம்மிக கித்துல்கொட தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் தீர்வுகாணும் நோக்கில், அமைக்கப்பட உள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு பிரதிநிதிகளை நியமிக்குமாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, அரசியல் கட்சிகளுக்கு அறிவிக்கவில்லை என நாடாளுமன்ற செயலாளர் தம்மிக கித்துல்கொட தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு தமது பிரதிநிதிகளை நியமிக்குமாறு சபாநாயகர், அரசியல் கட்சிகளுக்கு அறிவித்துள்ளதாக அண்மையில் நடை பெற்ற அமைச்சரவை தீர்மானங் களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், பதில் அமைச்சரவை பேச்சாளர் பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா (15 ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்பார்த்த விளைச்சல் இல்லை; கவலை தெரிவிக்கின்றனர் விவசாயிகள்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஊரியான் பிரதேசத்தில் இம்முறை மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கையில் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை என பிரதேச விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் 350 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் போதியளவு நீர் விநியோகம் இல்லாமையால் பெரும்பாலான விவசாயிகள் தமது செய்கையை இடைநடுவில் கைவிட்டனர்.

இருந்தபோதிலும், குறிப்பிட்ட சில விவசாயிகள் செய்கையை மேற்கொண்டு நெல்லினை அறுவடை செய்துள்ள நிலையில், அவை போதிய விளைச்சலைத் தரவில்லை எனவும் இதனால் தமக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர். (உ-கே)

## சாட்டியில் மோதல்;இளைஞர் படுகாயம்

யாழ்.சாட்டிக் கடற்கரையில் உல்லாசப் பொழுதுபோக்கில் ஈடுபட்ட இளைஞர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த நிருபன் (வயது-22) என்ற இளைஞர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடற்கரையில் பொழுதுபோக்கில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை, போதை தலைக்கேறியதால் குறித்த இளைஞர் மீது சக நண்பன் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார். (எப்.எஸ்)

## வலி.தென்மேற்கு பிரதேசசபை ஊழியர்கள் பிரிவுபசார விழா

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிதேசசபையில் கடமையாற்றி இடமாற்றலாகியும், பதவியுயர்வு பெற்றும் சென்ற ஊழியர்களுக்கான பிரிவுபசார விழா இன்று மதியம் 1.00 மணியளவில் சபையின் இரவீந்திரன் கலாசார மண்டபத்தில், ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் இ.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

திருமதி சா்மிளா சிறிகாந்தனின வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில்,

வாழ்த்துரையை சபையின் தலைவர் அ.ஜெபநேசன் நிகழ்த்தவுள்ளார்.

இப்பிரிவுபசார நிகழ்வில், து.கஜேந்திரமோகன், தி.சுதர்சன், ந.கலாவர்ணன், து.சுதர்ஜன், க.மோகனராஜ்குமார், திருமதி சந்திரசேகரன் டொறத்தி, செல்வி நடராஜன் பொன்ராணி, திருமதி பாலசுகந்தினி தயாபரன், கு.இரத்தினராசா, பொ.ஜனகன், திருமதி தவமலர் மதிமுருகன், திருமதி கஜனி சரத்சந்திரன், திருமதி ஜெயந்தி குகாநந்தன், திருமதி தயாளினி நவாசன், செல்வி யயமதி, சி.என்.கெயின் சாள்ஸ்,திருமதி சிந்துஜா ரிசிகேசன், ம.வி.குணாளன் ஆகியோர் பிரிவுபசார நாயகர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

## கல்விக் கண்காட்சி

கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் இடைநிலைப்பிரிவு மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கண்காட்சி இடைநிலைப் பிரிவு மாணவர்களின் ஒழுங்கமைப்பில் பாடரீதியான கற்றல்-கற்பித்தல் உபகரண கண்காட்சியாக நடைபெறவுள்ளது. (உ-கே)

## இரு மாணவர்கள் சித்தி பெற்றனர்

(யாழ்.நிருபர்)

அண்மையில் வெளிவந்த ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி இம்முறை கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் இருந்து இரண்டு மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

பி.சஞ்சயன் 160 புள்ளிகள், க.மதுயா 153 புள்ளிகள் பெற்றுள்ளனர். (10)

## பாலபண்டிதர் பரீட்சைகள்

(யாழ்.நிருபர்)

அகில இலங்கை ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம் நடத்தும் பாலபண்டிதர், ப்ண்டிதர் பரீட்சைகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெறும் மேற்படி பரீட்சைகள் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறுமென ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்க பரீட்சை இணைப்பாளர் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் தெரிவித்துள்ளார். (10)


தபால் மூலம் — ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month SEPTEMBER 2011 - FEBRUARY 2012

20 வருட அனுபவம்

தமிழ் மொழி மூலம்

| | | |
|---|---|---|
| Dip. in Psychology | - | உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - | காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - | மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - | சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - | வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - | வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - | விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு.டி |
| Dip. in Health & Hospital Management | - | சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு.டி |
| Dip. in Nursing Administration | - | தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - | கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - | மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

| | | | |
|---|---|---|---|
| ☐ கல்முனை | ☐ புத்தளம் | ☐ யாழ்ப்பாணம் | ☐ ஹட்டன் |
| ☐ மட்டக்களப்பு | ☐ வவுனியா | ☐ கண்டி | ☐ அனுராதபுரம் |
| ☐ திருகோணமலை | ☐ மன்னார் | ☐ கொழும்பு | ☐ நுவரெலியா |

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவு செய்த கற்கை நெறி என்பனவற்றைக் கீழ் உள்ள கையடக்கத் தொலைபேசிக்கு sms செய்து பெற்றுக்கொள்ளலாம். mobile : 0777140844, 0718034848

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி


Country Co - ordinator
MARUTHUR A.HASSEN (B.Sc psychology, M.Sc psychology,

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR SUPER MARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU - 07
web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 222 2917, 067 367 1749, 067 367 9688, 071 803 4848

(C/932)

விண்ணப்ப முடிவுத்திகதி: 28.09.2011


## பேராசிரியர் சண்முகலிங்கனின் 'ஆத்மா' இறுவட்டு வெளியீடு



(யாழ்ப்பாணம்)

சமூகவியல் சமூகம் அனுசரணையில் நகுலேஸ்வரி பண்பாட்டு மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்ட யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சண்முகலிங்கனின் ஆத்மா உள சமூக வல்லமை ஆரம் இறுவட்டு வெளியீட்டு விழா நேற்றுக் காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் தலைவர் மங்கள விளக்கேற்றி வைத்ததுடன், தலைமையுரையையும் ஆற்றினார். தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இராஜேஸ்கண்ணா ஆய்வுரையினை ஆற்றினார். இறுவட்டினை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சண்முகலிங்கன் வெளியிட்டு வைக்க, தொழிலதிபர் இ.ச.பே.நாகரத்தினம் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து விசேட பிரதிகள் வழங்கப்பட்டன. (எஸ்)

## வலிகாமம் வலயத்தில் முதலிடம் பிடித்தார்




(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட அராலி சரஸ்வதி மகாவித்தியாலய மாணவி செல்வி கேணுகா கருணாகரன் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 189 புள்ளிகளைப் பெற்று வலய மட்டத்தில் முதலாமிடத்தையும் மாவட்ட மட்டத்தில் 7ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

மேலும் இவர், கோட்ட, வலய, மாகாணமட்ட வாசிப்புப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இம்மாணவியின் சாதனைக்கு வழிகாட்டியாக இருந்த இவ்வித்தியாலய அதிபர் மா.சோமசுந்தரம் மற்றும் வகுப்பாசிரியர் விஜிதா ஆகியோரையும் இம்மாணவியையும் பாடசாலை சமூகத்தினரும், அப்பிரதேச மக்களும் பாராட்டியுள்ளனர். (உ)

## வலித்தூண்டல் அன்னம்மாள் ஆலய திருத்தப்பணிகள் துரிதகதியில்



(யாழ்ப்பாணம்)

கீரிமலை வலித்தூண்டல் புனித அன்னம்மாள் ஆலயத்தின் திருத்தப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. 162 வருட கால பழமைவாய்ந்த இந்த ஆலயமானது கடந்த இருபத்தெட்டு வருடங்களாக பொதுமக்களுடைய பாவனைக்கு அனுமதிக்கப்படாத நிலையில் காணப்பட்டது.

தற்போது இந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட நிலையில், புகழ்மிக்க இவ்வாலயத்தின் திருத்தப் பணிகள் இடம்பெற்று வருகின்றது.

## மாணவன் பாதணி வாங்க பண உதவி செய்த பொலிஸ் அதிகாரி

சாவகச்சேரியிலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவன் ஒருவருக்கு பாதணி வாங்குவதற்காக சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்திரசேகர ஆயிரம் ரூபா பணத்தை வழங்கியுள்ளார்.

இம்மாணவன் தனது தந்தையிடம் சப்பாத்து வாங்குவதற்காக வாங்கிய பணம் பிற்பொக்கற் திருடனால் களவாடப்பட்டதை அடுத்து அம்மாணவன் இது குறித்து சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து, இம்மாணவனின் குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் பொலிஸ் பொறுப்பதிகாரி இப்பணத்தை இம்மாணவனுக்கு வழங்கியுள்ளார். (11)

## விபத்தில் படுகாயம்

யாழ்.தட்டாதெருவில் நேற்று மாலை மோட்டார் சைக்கிள் துவிச்சக்கர வண்டியுடன் மோதியதில் யாழ்.பிறவுண் வீதியைச் சேர்ந்த கந்த சாமி மயூரன் (வயது-26) என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

சேவைசெய்யும் வாய்ப்பு எல்லாருக்கும் கிடைப்பதில்லை. தன் குழந்தைகளில் யாராவது ஒருவருக்கு உதவி செய்யும் வாய்ப்பை கடவுள் அளித்தால் அதன் மூலம் நீங்கள் பாக்கியம் பெற்றவராகிறீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள் - விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## பேச்சை அர்த்தமுள்ளதாக்குங்கள்!

தமிழ் மக்களின் தலைவர்கள் என சொல்லப்படுவோர் பலருக்கு இன்னும் சுடலை வெளிக்கவில்லை. அதுதான் பிரச்சினை என்று அலுவலகத்திற்கு வந்தவர் ஒருவர் சொல்லிப்போனார். அதாவது யதார்த்தம் விளங்காமல், உலகச் சூழல் புரியாமல் தமிழ் வீரம் என்று தாங்களாகவே ஒன்றை நினைத்துக்கொண்டு ஏதேதோ உளறிக்கொண்டிருக்கிறார்கள் என்பது அவரது ஒருமணி நேர உரையாடலின் சாராம்சமாக இருந்தது.

பேச்சு மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது குறித்து எந்த நம்பிக்கையுமோ அதற்கு வேண்டிய தயாரிப்புக்களோ, சரியானபடி அந்தப் பந்தைக் கோல் கம்பங்களை நோக்கி எடுத்துச்செல்லும் திறைமையோ காண்பிக்காமல் தேர்தல் வெற்றி ஒன்றுக்காக மட்டுமே பேச்சுவார்த்தை – ஏகப் பிரதிநிதித்துவம் வாய்பாட்டைச் சொல்லிக்கொண்டிருப்பவர்களாகக் கூட்டமைப்பினர் உள்ளார்கள்.

மறுபுறம், அரசுடன் பேசுவதே தமிழர்களுக்குச் செய்யும் துரோகம் என்கின்ற அதிதீவிரவாதத்தை ஓங்கியடித்து, ஆவேசத் தமிழினத்தின் ஆதரவை கூட்டமைப்பிடமிருந்து பறித்தெடுத்துவிட முனைப்புக்காட்டுகிற புலம்பெயர் தமிழர்களின் பினாமிகளது வீராவேசம், சிறுவயதில் நம் சரித்திர நாவல்களைப் படித்ததில் ஏற்பட்டது போன்ற விறுவிறுப்பைத் தருகின்றது.

வந்தியத்தேவனதோ, இளையபல்லவனதோ மின்னிச் சுழலும் வாள், பல தலைகளை உருண்டோ வைத்துவிட்டுக் கண்ணிமைப் பொழுதில் உறைக்குள் சென்றுவிடும் அந்த அதிசயத் தமிழ் வீரத்தை வியந்து வியந்து புளகாங்கிதம் அடையாமல் இருக்கமுடியுமா! அப்படி ஒரு புளகாங்கிதத்துடனேயே இன்றைய வாழ்வின் நெருக்கடியையும் எதிர்கொள்வதற்கான வீர வசனங்களை வெளியிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இலங்கை அரசை உலகம் மிரட்டிப் பணியவைத்துவிடும், அல்லது எங்களது வீர வசனத்தால் பணியவைத்துவிடலாம் ; எதற்காகப் பேச்சுவார்த்தை என்று போய் இலங்கை அரசைக் காப்பாற்ற வேண்டும்? என்று கேட்கும் அளவிற்கு எங்களது அரசியல் ஞானம் அதலபாதாளத்திற்கு இறங்கிவிட்டது.

உண்மையில், தமிழ்த் தரப்பு வெறுங்கையுடன் பேச்சுவார்த்தை மேசைகுப் போய் வெறுங்கையுடன் திரும்பி வந்துகொண்டிருப்பதிலும் எந்த அர்த்தமும் இல்லை. பேச்சுவார்த்தை முறிந்ததும் சிரித்தபடி வெளியே வந்துகொண்டிருப்பது தேர்தல் மேடைகளுக்கு உதவியாக இருக்கலாம்; ஆனால் தீர்விற்கு உதவாது.

கூட்டமைப்புடன் இலங்கை அரசு பத்துச் சுற்றுப் பேச்சு நடத்திக் கைவிட்ட பிறகு, மீண்டும் இந்தச் சுற்று ஆரம்பித்திருப்பது கூட்டமைப்பைத் தெரிவுக்குழுவிற்கு இழுக்கும் நோக்கத்தினால்தான் என்று சொல்லப்படுகின்றது. தொடர்ந்து பேசலாம் என்றும் பேச்சுவார்த்தையில் பகுதி பகுதியாகக் காணப்படும் இணக்கப்பாட்டினை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு அனுப்பிவைப்பது என்றும், கடந்த 2 ஆம் திகதி ஜனாதிபதி – சம்பந்தன் சந்திப்பின்போது இணக்கம் காணப்பட்டதாகத் தெரியவருகின்றது.

அரசாங்கம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுநடத்தும் அதே வேளை, நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலமும் தீர்வுப்பேச்சுக்களைச் சமகாலத்தில் முன்னெடுக்கவிருப்பதாகத் தெரியவருகின்றது. இதன் மூலம் கூட்டமைப்பைத் தெரிவுக்குழுவில் பங்குபற்ற வைத்து, பேச்சைத் தொடர்வது அரசின் நோக்கமாகத் தெரிகிறது.

எவ்வாறெனினும், இந்தத் தீர்விற்குள் நடைமுறைக்கு வரும் அதிகாரப் பகிர்வானது ஏதோவொரு வழியில் அனைத்துத் தரப்பினருடனுமான இணக்கப்பாட்டினூடாகவே சாத்தியமாகும் என்பதைத் தமிழ்த் தரப்பிற்கு உணர்த்தும் முயற்சியிலேயே அரசு இப்போது இறங்கியிருக்கிறது. வீண் கற்பனைகளில் மிதக்காமல் இந்த யதார்த்தம் தமிழ்த் தரப்பால் உணர்ந்து கொள்ளப்பட வேண்டியதே.

எனவே, எந்தவிதத் தீர்மானமும் இன்றிப் போய் பேச்சுவார்த்தை முறிவுகளில் சந்தோசப்பட்டுத் திரும்பிவராமல், கூட்டமைப்புக் கருதும் அந்த முழுமையான தீர்வுத்திட்டம் என்ன என்பதை முன்வைத்து பேசுவதற்கு அது தயாராகவேண்டும். அதுபோல, நாட்டிலுள்ள மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய கட்சிகளும் தாங்கள் கருதும் தீர்வுத்திட்டங்களை முன்வைக்கவேண்டும்.

பல கட்சிகள் ஏற்கனவே சர்வகட்சிக் குழுவில் தங்கள் திட்டங்களைச் சமர்ப்பித்துள்ளன. கூட்டமைப்பிற்கும், ஐ.தே.கட்சிக்கும் கூட அந்தப் பொறுப்புண்டு. காணியா, பொலிஸா, மாகாணங்களின் இணைப்பா என்று துண்டு துண்டாகப் பேசிக்கொண்டிராமல் அவரவர்களது முழுமையான தீர்வுத்திட்டத்தை முன்வைத்துப் பேசவேண்டியது இப்போதைய தேவை.

தமிழர்களின் இன்றைய நிலையை மேம்படுத்த வல்ல ஒரு சாத்தியபூர்வமான தீர்வுக்கு அரசை நிர்ப்பந்திப்பதற்கு, தமிழ்க்கட்சிகளிடையே ஏற்படக்கூடிய குறைந்தபட்ச இணக்கப்பாட்டைக் கண்டுகொள்வதும், நாட்டின் ஏனைய தரப்புக் கட்சிகளிடமும் அதற்கான புரிதலை ஏற்படுத்துவதும் உதவக்கூடும். இலட்சிய பூர்வமான ஒன்றை வலியுறுத்தியபடி மக்களையும், நாட் டையும் வதைக்குள் வைத்திருப்பதைவிட சாத்தியபூர்வமான ஒன்றிற்கு முயற்சி செய்வதன் அவசியத்தை அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

- ஆசிரியர்

# மக்களின் கடமைகளை நிறைவேற்றுவதே தற்போது எஞ்சியுள்ள பிரச்சினையாகும்

## - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ




(கொழும்பு)

நாட்டில் தற்போது மிகுதியாக எஞ்சி இருப்பது பொது மக்களுக்கான கடமைகளை நிறைவேற்றுவது மாத்திரமே அதற்கு ஏற்ற வகையில் அர்ப்பணிப்புடன் செயற்பட எண்ணியுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற அசாத் சாலிக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார். நாட்டைக் கட்டி எழுப்பும் பாரிய பணியில அரசாங்கம் தற்போது ஈடுபட்டுள்ளது. எதிர்கால சமூகத்தின் நன்மை கருதி இந்தப் பணியை முறையாக நிறைவேற்ற முடிவெடுத்துள்ளோம்.

மக்களை வெற்றி கொள்வதற்காக நாம் ஆகக் கூடுதலான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளோம். கொழும்பு மாநகர சபை மக்களுக்கு சிறந்த வீடுகளை வழங்குவதே அரசாங்கத்தின் ஏற்பாடு ஆகும். உண்மைக்குப் புறம்பான பொய்ப்பிரசாரங்கள் குறித்து மக்கள் அவதானமாக இருக்கவேண்டும்.

கொழும்பு மாநகர சபையின் நிர்வாகத்தை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு வழங்க மக்கள் உரிய முறையில் செயற்பட வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

## மன்னாரில் இளைஞர் கலை விழா

(மன்னார்)

இளைஞர் ஆண்டையொட்டி மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழு ஏற்பாடு செய்துள்ள இளைஞர் கலை விழா எதிர்வரும் 25 ஆம் திகதி மாலை 6 மணிக்கு நானாட்டான் ஆலய முன்றலில் இடம் பெறவுள்ளதாக கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் பிரதம விருந்தினராகவும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகை சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். இதன்போது நடனம், நாடகம், சிறப்பு உரைகள், கலைஞர்கள் கௌரவிப்பு, பரிசளிப்பு, நாட்டுக்கூத்து ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இலங்கை தமிழ் மாணவர்களுக்கு இந்திய அரசின் நிதி நன்கொடை

(கொழும்பு)

இந்தியாவில் உயர் கல்வியைத் தொடரும் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு நன்கொடை வழங்குவதற்கு இந்திய அரசு முன்வந்துள்ளது. ஆயிரத்திற்கும் அதிகமானோருக்கு இவ்வருடத்திலிருந்து நிதி நன்கொடைகளை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக தமிழக நிதியமைச்சர் பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இந்தியாவில் அகதி முகாம்களில் 21500 இலங்கைத் தமிழ் மாணவ மாணவிகள் உள்ளனர். இவர்களுக்கான இருப்பிட வசதிகளையும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

## மீன்பிடியை அபிவிருத்தி செய்ய பல்வேறு திட்டங்கள் முன்னெடுப்பு

(கொழும்பு)

மீன்பிடித் துறையை அபிவிருத்தி செய்வதற்காக பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவர் அமைப்பு, உணவுத்திட்டம் என்பன இணைந்து வழங்கும் 49 இலட்சம் அமெரிக்க டொலர் நிதி உதவியுடன் மீன் இறங்குதுறை நிலையங்கள் புனரமைக்கப்படவுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 13 கரையோர மாவட்டங்களைச் சேர்ந்த 40 நிலையங்கள் இதன் மூலம் மேம்படுத்தப படவுள்ளன.

இந்தப் பணிகள் இந்த மாத இறுதியளவில நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றன. அத்துடன் இந்த நிதி உதவியுடன் முல்லைத்தீவில் புதிய மீன்பிடித்துறைக்கான கட்டடம் ஒன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்தத் திட்டங்களிற்கு அமைய மீனவ சமூகத்தவரின் நன்மை கருதி மீன்பிடி இறங்கு துறைகள், ஐஸ் களஞ்சிய சாலை, மீன்பிடி இயந்திர களஞ்சியசாலைகள், சன சமூக மண்டபங்கள், மீன் ஏல விற்பனை நிலையங்கள் உட்பட பல பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வேலைவாய்ப்பிற்கான வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பரீஸ் லயன்ஸ் கழகத்தினால் யூனியன் அஸ்யூரன்சின் அனுசரணையுடன் நடத்தப்படும் தலைமைத்துவப் பயிற்சியும் வேலைவாய்ப்பிற்கான வழிகாட்டல் கருத்தரங்கும் இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்கு, 21 ஆம் திகதி காலை 10 மணி முதல் 12மணிவரை புத்தூர் சோமஸ்கந்தா கல்லாரியிலும் 22ஆம் திகதி மாலை 2.30 மணிமுதல் 4.30 மணிவரை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும், 23ஆம் திகதி மாலை 2.30 மணிமுதல் 4.30 மணிவரை மனோகரா தியேட்டர் அருகாமையிலுள்ள நாவலர் மகாவித்தியாலயத்திலும், 24ஆம் திகதி மாலை 2.30 மணிமுதல் 4.30 மணிவரை உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும், நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் கொமர்ஷல் வங்கியின் ஓய்வு பெற்ற சிரேஷ்ட முகாமையாளர் லயன் ரவீந்திரா, மானிப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் சுதாகரன், யூனியன் அஸ்யூரன்ஸின் மனிதவள அபிவிருத்தி முகாமையாளர் ம.விஜேந்தன் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொள்ளவுள்ளனர்.

க.பொ.த.(உ/த) தோற்றிய இளைஞர் யுவதிகள், ஓய்வுபெற்ற கனவான்கள், பகுதிநேர வேலை வாய்ப்பை பெற நினைப்போர் அவரவர் விரும்பிய இடங்களில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எஸ்

# மன்னார் நகரப்பகுதியில் மர்ம மனிதனின் அச்சுறுத்தல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள பெற்றா கிராமத்தில் நேற்று முன்தினம் மர்ம மனிதன் ஒருவர வீடொன்றின் மீது பாய்ந்துள்ளார். இதனையடுத்து வீட்டுக்காரரர்கள் சத்தமிடவே தப்பித்துச் சென்றுள்ளார். இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றநிலை காணப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

மன்னார் மாவட்டத்திலுள்ள பெற்றா கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் மர்மமனிதன் வீட்டு மதில் சுவரில் ஏறி பின்னர் அந்த வீட்டில் நின்றிருந்த முருங்கை மரத்தில் ஏறியுள்ளார்.முருங்கை மரத்திலிருந்து வீட்டுக்குப் பாயும்போது முருங்கை மரக்கிளை முறிந்து வீழ்ந்துள்ளது.

இந்தச் சத்தத்தைக் கேட்ட வீட்டுக்காரர்கள் வீட்டை விட்டு வெளியில் வந்த பொழுது உள்ளாடையுடன் நபர் ஒருவர் நிற்பதைக் கண்டு சத்தமிட்டுள்ளனர். அதை அடுத்து அந்த மர்மநபர் தப்பி ஓடிவிட்டார். இதன் பின்பு திரண்ட நூற்றுக்கு மேற்பட்ட ஊர்மக்கள் அந்தக் கிராமம் முழுவதும் சல்லடை போட்டுத் தேடியுள்ளனர்.

தகவல் கிடைத்து குறித்த இடத்துக்கு வந்த பொலிஸாரும் அவர்களுடன் இணைந்து தேடுதல் வேட்டை நடத்தியும் எவரும் சிக்கவில்லை.மன்னார் மாவட்டத்தில் மீண்டும் ஒரு மாதத்தின் பின்னர் மர்ம மனிதன் நடமாட்டம் தொடங்கியுள்ளது.இது அந்தப் பகுதி மக்களை மேலும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

# புதிய கல்வி வாய்ப்புக்களை வழங்க மலேசிய உயர்கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர்களுக்குப் புதிய கல்வி வாய்ப்புக்களை வழங்கும் மலேசிய உயர்கல்விக் கண்காட்சி நாளை செவ்வாய்க்கிழமை யாழ். ஞானம்ஸ் உல்லாச விடுதியில் இடம்பெறவுள்ளது.

வெளிநாட்டுக் கல்வியில் நாட்டம் கொண்ட மாணவர்களுக்கு, பரந்து கிடக்கும் உயர்கல்வி வாய்ப்புக்கள் தொடர்பான சிறந்ததொரு அறிமுகத்தைக் கொடுக்கும் வகையில் இக்கண்காட்சி இடம்பெறுகின்றது.

பிரித்தானியா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா, கனடா பல்கலைக்கழக பட்டப் படிப்புக்களை வழங்கும் 10 மலேசிய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் இதில் பங்கேற்க உள்ளன.

இந்தக் கண்காட்சியில் கலந்துகொள்ளும் 10 பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்கும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். ஞானம்ஸ் உல்லாச விடுதியில் நடைபெறவுள்ளது.

விரிந்து கிடக்கும் பல்வேறு கற்கைத்துறைகளையும் ஏராளமான பல்கலைக்கழகங்களையும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் இந்தக் கண்காட்சியில் யாழ். மாவட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எஸ்)

# கட்டாயக் கல்வித்திட்டம் அமுல்படுத்த செயலமர்வு

(ஆனைக்கோட்டை)

யுனிசெவ் அனுசரணையுடன் வலிகாமம் வலயப் பாடசாலைகளில் கட்டாயக் கல்விக்கான கட்டளையை அமுல்படுத்தும் குழுவின் வேலைத்திட்டம் தொடர்பான செயலமர்வு நேற்று முன்தினம் மானிப்பாய் ஆசிரிய வள நிலையத்தில் நடைபெற்றது.

செயற்றிட்ட அலுவலகர் சண்முகராஜா தலைமையில் இச்செயலமர்வு நடைபெற்றது.

கட்டாயக் கல்வியின் முக்கியத்துவம் பற்றி வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் மாணவர் இடைவிலகலுக்கான காரணங்களும், அவற்றிற்கான பரிகாரங்களும் குறித்து வலிகாம வலய முறைசாராக் கல்விப் பிரிவைச் சேர்ந்த திருமதி கா. கஜபதி, மாணவர் வரவை பரிசீலிக்கும் குழுவின் வேலைத்திட்டங்கள் குறித்து வலிகாமம் செயற்றிட்ட அலுவலர் ந. சண்முகராஜா ஆகியோர் விளக்கமளித்தனர். (உ-104)

# ஆனந்த வித்தியாலயத்திற்கு பெருமை சேர்த்த மாணவி

(நல்லூர்)

யாழ். கல்வி வலயத்திற்கு உட்பட்ட நல்லூர் ஆனந்த வித்தியாலயம் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் இம்முறை சாதனை படைத்துள்ளது.

பாடசாலையில் இருந்து தோற்றிய நான்கு மாணவர்களில் அரியரெத்தினம் தனுஷா 167 புள்ளிகளைப் பெற்று பாடசாலை சமூகத்திற்குப் பெருமை சேர்த்துக்கொடுத்துள்ளார். (வி)

# பெறுபேறுகள் வெளியாகின

(அச்சுவேலி)

கல்விமாணி கற்கை நெறியின் இரண்டாம் வருடப் பரீட்சைப் பெறுபேறுகள் தேசிய கல்வி நிறுவகத்தால் வெளியிடப்பட்டுள்ளன. இப் பரீட்சைப் பெறுபேறுகளைக் கற்கைநெறி இணைப்பு நிலையங்களில் பரீட்சார்த்திகளின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணி கற்கை நெறிகள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி ஆசிரிய இணைப்பு நிலையங்களில் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் 2011-2013 புதிய கல்வியாண்டிற்கான கற்கை நெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (03)

# குடாநாட்டு கிராமப்புறப் பாடசாலைகள் புலமைப்பரிசில் பரீட்சையில் முன்னணி!

## வலயக் கல்வித் திணைக்களம் தகவல்

(யாழ்ப்பாணம்)

ஐந்தாம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் பரீட்சையில் இம்முறை யாழ். குடாநாட்டின் கிராமப்புறத்தின் அநேகமான பாடசாலைகள் கணிசமான முன்னணியில் உள்ளதாக வலயக் கல்வித் திணைக்கள வட்டாரங்களின் தரவுகளில் இருந்து அறிய முடிந்தது.

அதாவது, முன்னணிப் பாடசாலைகள் மற்றும் கிராமப்புறப் பாடசாலைகளுக்கும் இடையில் பரீட்சைப் பேறுபேற்றில் விகிதாசாரத்தில் கிராமப்புறப் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியில் அதிக முன்னேற்றம் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக, அநேக பாடசாலைகளில் பத்திற்கு உட்பட்ட மாணவர்கள் தோற்றிய பரீட்சையில் ஒரு மாணவர் சித்தி பெற்றிருப்பதோடு ஏனைய மாணவர்கள் 100இற்கும் 151இற்கும் இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

அதேசமயம் முன்னணிப் பாடசாலைகளில் கல்வி வளர்ச்சி அதிகரித்தாலும்கூட பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையை நோக்கும்போது சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைந்தே காணப்படுகின்றது. (வி)

# கிளி. ஊரியான் பிரதேசத்தில் காசுக்கான வேலைத்திட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஊரியான் பிரதேசத்தில் காசுக்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

டி.ஆர்.சி. நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் இக்காசுக்கான வேலைத்திட்டத்தின் மூலம் இப்பிரதேசத்திலுள்ள கழிவு நீர் வாய்க்கால்கள், நீர்ப்பாசன வாய்க்கால்கள், வீதிகள் என்பன துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வேலைத்திட்டத்தில் 100இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஈடுபட்டு வருவதாகவும், ஒருவருக்கு ஒரு நாளுக்கு கூலியாக 700 ரூபா வீதம் வழங்கப்பட்டு வருவதாகவும் அந்த நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-கே)

# வீதிகளுக்கு மின் விளக்குகள்



(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நல்லூர் பிரதேசத்திற்கென சுமார் 200 மின் விளக்குகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இவற்றுள் ஒரு தொகுதி மின் விளக்குகள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர்த் தொகுதி அமைப்பாளர் ரவீந்திரதாசனால் கொக்குவில் தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் கோயில் சுற்றாடல், தலையாழி, பிரம்படி, அச்சுக்கூட வீதி ஆகிய பிரதேசங்களிற்கு வழங்கப்பட்டது. சில பிரதேசங்களில் இவ் மின்விளக்குகள் உடனடியாகப் பொருத்தப்பட்டது குறிப்பிடதக்கது.

இப்பகுதியில் மின் விளக்குப் பொருத்தப்பட்டமை குறித்து அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். (74)

# பொக்கணையிலிருந்து இருபாலைக்கு விரைவில் குடிநீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு பொக்கணை நன்னீர்க் கிணற்றில் இருந்து இருபாலைப் பகுதிக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்கப்படவுள்ளது.

தேசிய குடிநீர் வடிகாலமைப்புச் சபையின் ஏற்பாட்டில் இந்த குழாய் மூலமான குடிநீர் வழங்கலுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது இருபாலையில் நிலத்தடிக் குழாய்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தக் குழாய்கள் பொருத்தும் பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊரெழு பொக்கணை நீர் மட்டம் வற்றாத கிணறு வரைக்கும் இந்த நிலத்தடிக் குழாய்கள் அமைக்கப்பட்ட பின்னர் குடிநீர் வழங்கல் ஆரம் பிக்கப்படும்.

இந்தக் குடிநீர் வழங்கலின் மூலம் இப்பகுதியைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பெரிதும் நன்மையடைய உள்ளனர் என்று தேசிய குடிநீர் வழங்கல் அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (வி)

## கல்விமாணி கற்கைநெறி இறுதியாண்டுப் பரீட்சை

(அச்சுவேலி)

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணி கற்கை நெறியின் இறுதியாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் இடம்பெறவுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் மற்றும் நேரசூசி ஆகியன அவர்களின் சொந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (03)

# பாண்ட் வாத்தியப்போட்டி

(நெல்லியடி)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தினால் முதன் முதலாக பாடசாலைகளுக்கிடையிலான பாண்ட் வாத்தியப் போட்டி ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை ஓமந்தை மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இப்போட்டியில் முதலாமிடத்தை பொதுக்குளம் ம.வியும், இரண்டாமிடத்தை கனகராயன்குளம் ம.வியும், மூன்றாமிடத்தை கோயில் புளியங்குளம் ம.வியும் பெற்றுக்கொண்டன.(12)




மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளையின் உடுப்பிட்டி சேவை நிலைய முதலாவது ஆண்டு நிறைவு விழாவை வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் க. சுசீந்திரன், வல்வெட்டித்துறை கிளை முகாமையாளர் பி. கிருஷ்ணானந்தன், கிளையின் உதவி முகாமையாளர் திருமதி ஸ்ரீகாந்த நிர்மலா விமலேந்திரன், உடுப்பிட்டி சேவை நிலைய முகாமையாளர் திருமதி பதனராணி யோகராசா மற்றும் வங்கி ஊழியர்கள் ஆகியோர் இணைந்து கேக் வெட்டி கொண்டாடுவதைக் காணலாம்.

# காலபோக செய்கைக்கான நெல் விதைப்பு நடவடிக்கை

(கிளிநொச்சி)

துணுக்காய் ஆலங்குளத்து நீரைப் பயன்படுத்தி நெற் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் காலபோக நெற் செய்கைக்கான விதைப்பினை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் கமநல மத்திய நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

இந்த வருடம் காலபோக நெற் செய்கை 100 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-121)

# யாழ். மாவட்டத்தில் 114 சிறுவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லை

## மாவட்ட செயலகப் புள்ளிவிபரத் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த தை மாதம் முதல் ஜீன் மாதம் வரையான 6 மாத காலப்பகுதியில் திரட்டப்பட்ட தகவலில் பிறப்பு அத்தாட்சிப் பத்திர மின்றி 114 சிறுவர்கள் வாழ்வதாக யாழ். மாவட்ட செயலக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவித் துள்ளன.

மாவட்டத்தின் 15 பிரதேச செயலர் பிரிவுகளி லும் இவ்வாறான நிலையிலுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை தொடர்பாக விபரங்கள் வருமாறு:

நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவில் 9 சிறுவர்களும் வேலணைப்பிரதேச செயலர் பிரிவில் 5 சிறுவர்களும், காரைநகர் பிரிவில் 3 சிறுவர்களும் யாழ்ப்பாணப் பிரிவில் 5 சிறு வர்களும் நல்லூர்ப் பிரிவில் 4 சிறுவர்களும், சண்டிலிப்பாய் பிரிவில் 8 சிறுவர்களும், சங்கா னைப் பிரிவில் 7 சிறுவர்களும், உடுவில் பிரிவில் 2 சிறுவர்களும், தெல்லிப்பளைப் பிரிவில் ஒரு சிறுவனும், கோப்பாய்ப் பிரிவில் 11 சிறுவர்களும், சாவகச்சேரி பிரிவில் 5 சிறுவர்களும், கரவெட்டிப் பிரிவில் 11சிறுவர்களும், பருத்தித்துறைப் பிரி வில் 11 சிறுவர்களும் மருதங்கேணிப் பிரிவில் 32 சிறுவர்களும், பிறப்பு அத்தாட்சிப் பத்திரமின்றி உள்ளதாக யாழ். மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் சகல சிறுவர்களும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெற்றிருப்பதாக அந்த புள்ளி விபரத் தகவல் மேலும் தெரிவித்துள்ளன. (உ)

# பாதிப்பை ஏற்படுத்தும் பாலம்

நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக உள்ள பாலம் நெடுநாட்களாக திருத்தப்படாது உள்ளது. பருவகால கடும்மழை ஆரம்பமாகவுள்ள நிலையில் இப்பாலத்திற்கு ஊடாக பாயும் வெள்ளம் அருகில் உள்ள வர்த்தக நிலையங்களுக்குள் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பாதசாரிகள் மற்றும் பாடசாலை செல் லும் மாணவர்களும் இப்பாலத்தினால் பாதிப்பை எதிர்கொள்



கின்றனர். ஆகவே உரிய தரப்பினர் தகுந்த நடவடிக்கை எடுத்து இப்பாலத்தினை புனரமைப்புச் செய்து மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்க்க உதவுமாறு கோரப்பட்டுள்ளன.

# துவிச்சக்கர வண்டிக்கான உரிமத்தகடுகளை பெறாதோர் உடனடியாக பெற்றுக்கொள்ளவும்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குள் இவ்வாண்டுக்கான துவிச்சக்கரவண்டி உரிமத் தகடு பெறாதவர்கள் உடனடியாக அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் பெற்றுக் கொள்ளா தவர்களுக்கு பொலிஸாரின் உதவியுடன் வழிமறிக்கப்பட்டு உரிமைத்தகடுகள் வழங்கப் படும் என பிரதேச சபையின் தவிசாளர் தெரி வித்துள்ளார்.

அண்மையில் மானிப்பாய் பிரதேச சபை யில் நடைபெற்ற கூட்டமென்றில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாட்டுடன் கடைகளுக்கு முன்பாக துவிச்சக்கர வண்டிகளை நிறுத்துதல், வாக னங்களை நிறுத்தல் பொருட்களை வைத்து விற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகளை தடைசெய்தல் மற்றும் கடைகளின் முன் நீண் டிருக்கும் கூரைகளை அகற்றுதல் மானிப்பாய் வைத்தியசாலையினூடாக கனரக வாகனங்கள் செல்வதை தடைசெய்தல்,

மேலும் வீதிகளில் சைக்கிளில் செல்வோர் சமாந் தரமாகச் செல்வதை தடைசெய்தல், வரியை பெறு வதை அமுல்படுத்தல் மோட்டார் சைக்கிள்களுக்கு 40மைல் வேகக்கட்டுப்பாடு போன்ற நடவடிக்கைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தவி சாளர் மேலும் தெரிவித்தார். (உ-104)

# க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான கணித பாட மதிப்பீட்டுப் பரீட்சை

(அச்சுவேலி)

கல்விப் பொதுத் தாராதர சாதாரணதரப் பரீட் சைக்கு இவ் வருடம் தோற்றவுள்ள மாணவர் களுக்காக யாழ். வலயத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ள கணித பாட மதிப்பீட்டுப் பரீட்சைக் கான தினங்களில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கேத்திரகணித அலகுகளை உள்ள டக்கியதான அலகு ரீதியான மதிப்பீட்டுப்பரீட்சை ஒக்டோபர் மாதம் 09ஆம் திகதியும் முழு அலகு களையும் உள்ளடக்கியதான இறுதிப் பரீட்சை 19ஆம் திகதியும் நடைபெறுமென பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ் நேரசூசிக்கமைய ஆசிரியர்கள் மாணவர்களை தயார்ப்படுத்தி பரீட்சைக்குத் தோற்று விப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறும் கேட்கப்பட்டுள்ளது. (03)

# பெரும் போக நெற்செய்கை குடாநாட்டில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பொரும்போக நெற்செய்கை க்கான ஆயத்தப் பணியில் விவசாயிகள் மும்முர மாக ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வாரத்தில் பரவலாகப் பெய்த மழையை அடுத்து விவசாயிகள் தமது வயல் நிலங்களை உழுது பசளையிட்டு சீர்படுத்தும் நடவடிக்கையில் மும்முர மாக ஈடுபட்டு வருகின்றனர்.

அதேவேளை, நெல் விதைப்பு பணிக்காக அனே கமான விவசாயிகள் மழையை எதிர்பார்த்த வண் ணம் உள்ளனர். அனேகமான வயல் பிரதேசங்களில் அமைந்திருக்கும் ஆலயங்களில் மழை பெய்ய வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. (வி)

# நயினா தீவுப் பகுதிக்கு சுழற்சிமுறை மின்சாரம்

(நயினாதீவு)

நயினாதீவுப் பகுதிக்கு தற்போது சுழற்சி முறையில மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய உற்சவ காலத்தினை முன்னிட்டு அங்கேகொண்டு செல்லப் பட்ட மேலதிக ஜெனரேற்றர் மூலம் மின்சார விநியோ கம் சீர் செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது இந்த ஜெனரேற்றர் பழுதடைந்ததால் ஏற்கனவே இருந்த ஜெனரேற்றர்கள் மூலம் மின் விநியோகம் காலை இரவு என மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இரவில் மின்சாரம் தடைப்படும் சமயத்தில் ஆலயச் சுற்றாடல் இருளில் மூழ்கிக்காணப்படு கின்றது. (வி)

# இருளில் மூழ்கும் இராச வீதி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் இராச வீதி இரவில் இருளில் மூழ்கிக் காணப்படு கின்றது. இந்தப் பிரதான வீதியில் மின்சார வெளிச்ச ஏற்பாடுகள் இதுவரைக்கும் ஆரம்பிக்கப்படாத நிலையில் இரவில் இருளில் சூழ்ந்து காணப்படுகின்றது காலை தொடக்கம் மாலை வரைக்கும் இந்த வீதியால் பயணம் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இருள் சுழ்ந்த பின்னர் இவ் வீதி மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றது. மர்ம மனிதன் மற்றும் திருடர் களின் நடமாட்டத்தினால்தான் இவ் வீதி மாலையுடன் வெறிச்சோடு வதாக மக்கள் தெரிவித்தனர். (வி)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(19.09.2011 – திங்கட்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
புரட்டாதி 02 ஆம் நாள்.
இராகுகாலம் 7.33–9.03, சுபநேரம் 12.03 –01.33,
நட்சத்திரம்: ரோகிணி மு.இ. 9.23 வரை
திதி: ஸப்தமி பி.இ. 2.45 வரை

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:– பணம் வரும், இனசன அழைப்பு, தொழில் விருத்தி, உல்லாசப் பயணம், தேக ஆறொக்கியம்.

ரிஷபம:– மாமனார் பகை, பணக் கஷ்டம், தேழப்போகல், எதிரியை வெல்லுதல், உடல் நலக்குறைவு.

மிதுனம் :– பணம் வரும் இனசன அழைப்பு, குடும்பத்தில் மகிழ்ச்சி, உறவினர் வருகை, கடன் வசூல்.

கடகம்:– மாமியார் பகை, பணக் கஷ்டம், வீண் கோபம், தொழில் நஷ்டம், மனக்குறை.

சிம்மம்:– பண வரவு, பெரியோர் பாராட்டு நினைத்ததைச் சாதித்தல் இனசன அழைப்பு, தேக ஆரோக்கியம்.

கன்னி :– மாமானார் பகை, பணக்கஷ்டம், வீட்டில் குழப்பம், வீண் அலைச்சல், நண்பர் வருகை.

துலாம் :– பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, விருந்துபசாரம், பெரியோர் ஆசி. தேக ஆரோக்கியம்.


விருச்சிகம்– மாமியார் கோபம், பணம் வரும், குடும்பத்தில் கவலை, மனசஞ்சலம், உடம்பு உபாதை.

தனுசு:– பணக் கஷ்டம், மைத்துனர் சண்டை, நண்பர்வருகை, உறவினர் கரைச்சல், உடல் உபாதை.

மகரம:– குடும்பத்தில் குதூகலம், பணம்வரும், இனசன அழைப்பு, விருந்துபசாரம், உடல் உபாதை.

கும்பம் :– பணக் கஷ்டம், மருத்துவச் செலவு, மாமியார் பகை, வீண் அலைச்சல், மனக் குறை

மீனம் :– குடும்பத்தில் குதூகலம், பணம் வரும் மனமகிழ்ச்சி, அதிகாரப் போட்டி, தேக ஆரோக்கியம்.




இண்டைக்கு நான் அருந்தப்பு; இப்படிச்சொன்னாலும் எண்டைக்குமே எங்கட வாழ்க்கை மயிரிழையில்தான் ஊசலாடுது.

என்னெண்டா என்ர பழைய றலிச் சைக்கிள்ல மடம் வீதியால போய் வேம்படி வீதிக்குத் திரும்பினன். அந்த முடக்கில் றோட்டுப் பழுதடைந்து பெரிய பள்ளம் இருக்கு.

அந்த முடக்கில் மட்டுமில்ல அங்கால அங்காலையும் தொடர்ந்து பள்ளம் பிட்டிதான். அந்தப் பள்ளத்துக்காக கொஞ்சம் கொள்ள விட்டுத்தான் போனன்.

அந்த ஓரத்தையே இலக்கு வைச்சுக்கொண்டு பொடிச்சி ஒண்டு சைக்கிள்ல வந்துது.

அவளுக்குப் பின்னால வந்தான் ஒரு ஆட்டோக்காரன். அவன் அந்தப் பள்ளங்களில இருந்து ஆட்டோவைக் காப்பாற்ற எடுத்த ஆலாபர்ணத்தைக் கண்ட எனக்குக் கரிக்குடல் கையில இல்லை.

அந்தப் பொடிச்சியும், நானும் சரியெண்டுதான் நினைச்சன். அவன் வலுகெட்டிக்காரன் ஒரு வெட்டில எங்களையும் ஆட்டோவையும் காப்பாற்றிப்போட்டூான்.

இல்லாட்டில் சொர்க்கைக் கண்டிருப்பனோ இல்லை பெரியாசுப்பத்திரியில் கிடந்து சீரழிஞ்சிருப்பனோ ஆர் கண்டது!

இதைப் போல எத்தின கதை. அதுக்கு முன்னால தட்டா தெருச் சந்தியில் தேத்தண்ணி குடிச்சிட்டு சைக்கிள்ல ஏறினன்.

பின்னால மோட்டச் சைக்கிள்ல வந்த பொடியள் ரெண்டு 'ஐயா… ஐயா' எண்டு கொண்டு அரசடிவீதிக்குத் திரும்பிக் கொண்டு போனாங்கள்.

உப்பிடி காலேல நாச்சிமார்கோயிலடியில இருந்து கரையூரில உள்ள கடைக்குப் போட்டுவாறேக்கிடேல மயிரிழைத் தப்புதல்கள் மலிஞ்சுகிடக்குப் பாருங்கோ!

இதுக்கு றோட்டைக் குற்றஞ்சொல்லுறதா இல்லாட்டி வாகனம் ஓடுறவங்களக் குற்றஞ் சொல்லுறதா? றோட்டில் உள்ள பள்ளம் திட்டியளால வாற விபத்துகள் அளவுக்கு புதிசாப் போட்ட காப்பெற் வீதிகளிலேயும் விறிசா ஓட்டம் ஓடி விபத்துகள் ஏற்படத்தான் செய்யுது.

இதுக்கெல்லாம் காரணம்இன்னமும் யாழ்ப்பாணத்தில அசம்பாவிதக் காலங்களுக்குப் பின்னால இன்னமும் பொலிசாரின் போக்குவரத்துப் பிரிவினர் சரியாக இயங்காமைதான்.

பெரியகடையுக்க முக்கிய சந்தியளில நிற்கிறவையைக் காண முடியாமல் இருக்கும் பாத்தா வெய்யிலுக்காக நிழல்களில் போய் நிண்டிருப்பினம்

இந்தளவு நிலைமேல வீதி ஒழுங்குகள் பேணப்பட்டால் என்னெண்டு விபத்துகளைத் தடுக்கிற! மற்றது வீதியள் ஒண்டும் ஒழுங்காத் திருத்தேல்ல. தார்க்கலவையை இடியப்பத்துக்கு சம்பல் வைச்ச மாதிரி வைச்சுப் போட்டுப் போனாச் சரியே!

எல்லாம் வெறும் பேய்க் காட்டலாத்தான் இருக்கு: மர்ம மனிதன், கிறிஸ்பூதம் போல…

# தேவராளி இந்து, சென் பற்றிக்ஸ் இறுதிப் போட்டியில் பலப்பரீட்சை


தேவராளி இந்துக் கல்லூரி அணியினர்


சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியில் தேவராளி இந்துக் கல்லூரி மற்றும் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிகள் பலப்பரீட்சையில் ஈடுபடவுள்ளன.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் மற்றும் யாழ். மாவட்ட கால்பந்தாட்ட சம்மேளனம் ஆகியவற்றால் யாழ். மாவட்ட பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டித் தொடர் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்றுக் காலை நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் தேவராளி இந்துக் கல்லூரி அணியும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இறுதி வரை பரபரப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் கோல் எதனையும் போடவில்லை.

இதன் காரணமாக தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் தேவராளி இந்துக் கல்லூரி அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது.

மாலை நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும், சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின.

யாழ். மாவட்ட அணிகளில் இரு அணிகளுமே பலம் வாய்ந்த அணிகள் என்பதால் இப்போட்டி இறுதி வரை பரபரப்பாக நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

இதில் சிறப்பான பந்துப் பரிமாற்றத்தையும், வேகமான ஆட்டத் திறனையும் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வெளிப்படுத்தியது.

இறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றது.

இறுதிப் போட்டி இன்று மாலை சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என்றும், இறுதிப் போட்டியில் வெற்றிபெறும் அணி மட்டும் தேசிய ரீதியான கால்பந்துத் தொடரில் பங்குபற்றும் தகுதி பெற்றுக் கொள்ளும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (20)

## வெளியானது போட்டி முடிவு

(குருநகர்)

சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு யாழ். சமாதான மற்றும் நல்லிணக்கப் பணியகம் கடந்த 16ஆம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட மென்பந்து துடுபபாட்டப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

முதலாமிடத்தை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை உசன் இராமநாதன் மகாவித்தியாலயமும், மூன்றாமிடத்தை கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் பெற்றுக் கொண்டன.

இப்போட்டி நிகழ்வில் தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வரதராஜமூர்த்தி, தென்மராட்சி ஆசிரிய வள நிலைய முகாமையாளர் சிவசுப்பிரமணியம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டதுடன் வெற்றியீட்டிய பாடசாலை அணிகளுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

இப்போட்டி நிகழ்வை ஏராளமான பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் ரசித்ததுடன் போட்டியாளர்களுக்கு உற்சாமுட்டினர் (68)

## கப்பினஸ் அணி சம்பியன்



(யாழ்ப்பாணம்)

சென். ஜோசப் வித்தியாலயத்தால் நடத்தப்பட்ட கால்பந்து தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கப்பினஸ் அணி கைப்பற்றிக் கொண்டது. வளம்புரம் சென் ஜோசப் வித்தியாலயம் தனது 100 ஆவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்தில் ஒரு நிகழ்வாக பாசையூர் உள்ளூர் அணிகளுக்கிடையிலான கால்பந்து தொடர் ஒன்றை நடத்தியது.

இதன் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் பாசையூர் சென் அன்ரனிஸ் மைதானத்தில் நடைபெற்றது. இதில் பாசிலோனா அணியை எதிர்த்து கப்பினஸ் அணி மோதியது. ஆரம்பம் முதல் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கப்பினஸ் அணி 6-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

வித்தியாலயத்தின் ஆண்டு நிறைவு இறுதி நாள் நிகழ்வில் கிண்ணம் வழங்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (20)

## சீனியர் லீக் கால்பந்தாட்டத் தொடர் மட்டக்களப்பை வென்றது பருத்தித்துறை

(நெல்லியடி)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் சீனியர் லீக் சுற்றுப் போட்டி ஒன்றில் பருத்தித்துறை லீக் அணி அபார வெற்றி பெற்றது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் லீக் அணிகளுக்கிடையிலான சீனியர் லீக் சுற்றுப் போட்டி நடத்தப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு ஆட்டம் நேற்று முன்தினம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் அணியை எதிர்த்து மட்டக்களப்பு கால்பந்தாட்ட லீக் அணி மோதியது.

ஆட்டம் தொடங்கியபோதே இரு அணிகளும் மிகவும் உச்சக்கட்டத்தில் விளையாட ஏழாவது நிமிடத்தில் மட்டக்களப்பு அணியைச் சேர்ந்த ஒரு வீரர் முதலாவது கோலைப் போட்டார்.

அதன் பின்னர் பருத்தித்துறை லீக் அணியினருக்கு கிடைத்த கோணர் வாய்ப்பை அவ்வணியைச் சேர்ந்த நிக்சன் அடிக்க 17ஆவது நிமிடத்தில் அதனை கோலாக்கினார்.

இதனால், இடைவேளைக்கு முன்னர் இரு அணிகளும் 1-1 என்ற கோல் கணக்கில் இருந்தது.

பிற்பாதி ஆட்டம் தொடங்கியபோது பருத்தித்துறை லீக் அணியைச் சேர்ந்த வீரர் கியூட் 9ஆவது நிமிடத்திலும், 16ஆவது நிமிடத்திலும் இரண்டு கோல்களைப் போட்டு அசத்தினார்.

இதனை முறியடிக்கும் முகமாக மட்டக்களப்பு அணி வீரர் ஒருவரால் மேலும் ஒரு கோலைப் போட ஆட்டம் விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது. அதன் பின்னர் பருத்தித்துறை லீக் அணியைச் சேர்ந்த ரஞ்சித் 22ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோலைப் போட ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இறுதியில் பருத்தித்துறை லீக் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இப்போட்டியின் பிரதம நடுவராக சுரேந்தரும், பக்க நடுவர்களாக ஆனந்தராசா மற்றும் சுரேந்திரனும் கடமையாற்றினர்.

அடுத்த போட்டியில் வவுனியா லீக் அணியை பருத்தித்துறை லீக் அணி எதிர்கொள்கின்றது.

2010ஆம் ஆண்டு நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை லீக் அணி சம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (12)

## யாழ். சென்றல் அணி ஒரு விக்கெட்டால் வெற்றி

(யாழ்ப்பாணம்)

அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் யாழ். சென்றல் அணி ஒரு விக்கெட்டால் வெற்றி பெற்றது.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் நடத்தப்பட்டு வரும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதன் லீக் ஆட்டம் ஒன்று கடந்த 17ஆம் திகதி நடைபெற்றது. இதில் யாழ். சென்றல் அணியும், ஈகிள்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஈகிள்ஸ் அணி 33.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிரூசாந், செந்தூரன் தலா 13, செயோன் 19, ரவிராஜ் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விமலகாந், றஜீவ்குமார் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய யாழ். சென்றல் அணி 28.4 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் றஜீவ் 24, றொகான் 38, ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிரூசாந், கோகுலன், செயோன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (07)

விளையாட்டு செய்திகள்

## தேசிய மட்ட கூடைப்பந்து காலிறுதியில் பற்றிக்ஸ்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி தகுதி பெற்றது.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டி பதுளையில் நடைபெற்று வருகின்றது.

ஆண்கள் அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டி ஒன்றில் சில்லே சென் மேரிஸ் அணியை எதிர்த்து சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது.

இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 30-20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இவ்வெற்றியின் மூலம் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி காலிறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது. (20)

## மத்தியஸ்தர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கால்பந்தாட்ட மத்தியத்தர்களுக்கான பரீட்சை டிசம்பர் மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இப்பரீட்சையில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய லீக்குகளுக்கு ஊடாக மத்தியத்தர் பரீட்சைக்கு தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முன்னிலை பெற்றது இலங்கை



(கொழும்பு)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முன்னிலை பெற்றுள்ளது.

இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தை இலங்கை அணி தொடர்ந்தது. இதில் மிகவும் பொறுமையாக ஆடிய சங்ககார 100ஆவது டெஸ்ட் போட்டியில் சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்டபோதும் 79 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். தொடர்ந்து வந்த அணித் தலைவர் டில்சான், மத்தியூஸ் இணை அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்ந்தியது.

இறுதியில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, இலங்கை அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 428 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் டில்சான் 83, சங்ககார 79, மஹேல ஜெயவர்த்தன 51, பிரசன்ன ஜெயவர்த்தன 47 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். மத்தியூஸ் ஆட்ட மிழக்காது 85 ஓட்டங்களை பெற்றிருந்தார். பந்து வீச்சில் சிட்லி, ஹொப் லாண்ட் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

நான்கு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இலங்கை அணி அதன் முதல் இனிங்ஸில் 112 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸ் 316.

# சம்பியன் லீக்கில் சச்சின் சந்தேகம்



(மும்பை)


10 அணிகள் பங்கேற்கும் 3ஆவது சம்பியன்ஸ் லீக் ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரில் சச்சின் டெண்டுல்கர் பங்கேற்பது சந்தேகமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பியன் லீக் ருவென்ரி 20 கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் ஒக்டோபர் 9ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்தப் போட்டியில், மும்பை இந்தியன்ஸ் அணியின் கப்டன் சச்சின் டெண்டுல்கர் பங்கேற்பது சந்தேகமாகி உள்ளது. இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில் வலது கால் பெருவிரலில் காயம் அடைந்த அவர், இன்னும் முழு உடல்தகுதியை எட்டவில்லை.

இந்த நிலையில் மும்பை இந்தியன்ஸ் அணி சென்னை வந்தது. ஈரப்பதம் காரணமாக மும்பை அணி நேற்று முன்தினம் பயிற்சியில் ஈடுபடவில்லை. மும்பை அணியின் பயிற்சியாளர் ரொபின்சிங் கூறுகையில், ஹர்பஜன்சிங் நிச்சயம் இந்த போட்டியில் விளையாடுகிறார். டெண்டுல்கர் ஆடுவாரா என்பதில் சந்தேகம் நிலவுகிறது. அவர் ஆடாவிட்டாலும் அது அணியைப் பாதிக்காது. இது மற்ற வீரர்கள் தங்கள் திறமையை நிரூபிக்க வாய்ப்பாகும். மும்பை இந்தியன்ஸ் அணி, பெங்களூரில் தீவிர பயிற்சி மேற்கொண்டு விட்டு சென்னை வந்துள்ளது. எங்கள் அணி வீரர்கள் ஐ.பி.எல். போல் இந்தப் போட்டியிலும் சிறப்பாகச் செயற்படுவார்கள் என்றார். மும்பை இந்தியன்ஸ் அணி தனது முதலாவது ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியைச் சந்திக்கிறது. இந்த ஆட்டம் சென்னை சேப்பாக்கத்தில் வருகிற 24ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# இந்தியாவில் சவால்தான்; எதிர்கொள்ளத் தயார்!



(லண்டன்)

ஒரு நாள் தொடரில் இங்கிலாந்து அணி ஆதிக்கம் செலுத்தி இருக்கலாம். ஆனால் அடுத்த மாதம் இந்தியாவில் விளையாடவுள்ள ஐந்து போட்டி கொண்ட ஒரு நாள் தொடரில் தான் உண்மையான சாவல் காத்திருக்கிறது என இங்கிலாந்துக் கப்டன் குக் தெரிவித்தார்.

இந்திய துணைக் கண்டத்தில், ஒரு நாள் போட்டிகளில் நாங்கள் பெரிய அளவில் சாதித்தது இல்லை. எனவே இன்னும் நாங்கள் நிறையக் கற்றுக் கொள்ள வேண்டி இருக்கிறது. இருப்பினும் எங்கள் மீது மிகுந்த நம்பிக்கை இருக்கிறது. கடைசியாக 2008ஆம் ஆண்டு இந்தியா சென்ற போது நாங்கள் ஒரு ஆட்டத்திலும் வெற்றி பெறவில்லை. எனவே அடுத்த இரண்டு மாதங்கள் எங்களுக்கு சவால் காத்திருக்கிறது. அதை எதிர்கொள்ளவும் தயாராகவுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

இந்தியா-இங்கிலாந்து இடையிலான 5 போட்டி கொண்ட ஒரு நாள் தொடர் ஒக்டோபர் 14ஆம் திகதி ஹைதராபாத்தில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பூபதி, போபண்ணா ஜோடி வெற்றி



(டோக்கியோ)

டேவிஸ் கோப்பை ரென்னிஸ் தொடரின், இரட்டையர் போட்டியில் இந்தியாவின் மகேஷ் பூபதி, ரோகன் போபண்ணா ஜோடி வெற்றி பெற்றது.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில், இந்தியா-ஜப்பான் அணிகளுக்கு இடையிலான டேவிஸ் கோப்பை ரென்னிஸ், உலகச் சுற்றுக்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள், நடக்கிறது. முதல் நாளில் நடந்த இரண்டு ஒற்றையர் போட்டியிலும், இந்திய வீரர்கள் சோம்தேவ் தேவ்வர்மன், ரோகன் போபண்ணா தோல்வியடைந்தனர். இதனால் இந்திய அணி 0-2 என பின் தங்கியிருந்தது.

நேற்று முன்தினம் இரட்டையர் பிரிவுப் போட்டிகள் நடந்தன. இதில் இந்தியாவின் மகேஷ் பூபதி, ரோகன் போபண்ணா ஜோடி, ஜப்பானின் சுகிடா, டட்சுமா ஜோடியை சந்தித்தது. முதல் செட்டை இந்திய ஜோடி 7-5 என வென்றது. அடுத்த செட்டை 6-3 என கைப்பற்றி, ஜப்பான் ஜோடி பதிலடி கொடுத்தது. அடுத்த இரு செட்களில் எழுச்சி பெற்ற இந்திய ஜோடி 6-3, 7-6 என்ற கணக்கில் கைப்பற்றியது.

முடிவில் 7-5, 3-6, 6-3, 7-6 என்ற செட் கணக்கில் இந்தியாவின் பூபதி, போபண்ணா ஜோடி வெற்றி பெற்றது. இருப்பினும் இந்திய அணி 1-2 என்ற கணக்கில் பின்தங்கியுள்ளது.

# டயமண்ட் லீக் தடகளம் உசைன் போல்ட் தங்கம்



(புரூசல்ஸ்)

பெல்ஜியத்தில் நடந்த டயமண்ட் லீக் தடகளப் போட்டியின், 100 மீற்றர் ஓட்டத்தில் ஜமைக்காவின் உசைன் போல்ட் தங்கம் வென்று அசத்தினார். தென்கொரியாவில் நடைபெற்ற உலக தடகளப் போட்டியின் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் தகுதி நீக்கப்பட்ட பின்னர் கடந்த வாரம் உலக தடகள சாலஞ்ச் போட்டியில், 100 மீற்றர் ஓட்டத்தில் உசைன் போல்ட் (9.85 வினாடி) தங்கம் வென்று ஆறுதல் தேடினார்.

பெல்ஜியத்தின் புரூசல்ஸ் நகரில் நடந்த டயமண்ட் லீக் தடகள போட்டியில் உசைன் போல்ட் பங்கேற்றார். சிறப்பாக ஓடிய உசைன் போல்ட், 9.76 வினாடியில் கடந்து தங்கம் வென்றார்.

இது டயமண்ட் லீக் தொடரில் சாதனை ஆகும். அடுத்த இரு இடங்களை ஜமைக்காவின் நெஸ்டா கார்ட்டர் (9.89 வினாடி), லிரோன் கிளார்க் (10.05 வினாடி) ஆகியோர் வென்று, வெள்ளி, வெண்கலப் பதக்கத்தை வென்றனர்.

இதேவேளை, நடந்த 200 மீற்றர் ஓட்டத்தில் ஜமைக்காவின் யோகன் பிளேக் 19.26 வினாடியில் கடந்து தங்கம் வென்றார். இது உசைன் போல்ட்டின் உலக சாதனையை (19.19 வினாடி) விட, 0.07 வினாடி மட்டும் குறைவு. அடுத்த இரு இடங்களைப் பெற்ற அமெரிக்காவின் வால்ட்டர் (19.53 வினாடி), ஜமைக்காவின் நிக்கேல் (19.91 வினாடி) வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினர்.

# சம்பியன் லீக் அறிமுக விழா நாளை

Airtel CHAMPIONS LEAGUE TWENTY 20

(ஹைதராபாத்)

மூன்றாவது சம்பியன் லீக் ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரின் அறிமுக விழா நாளை ஹைதராபாத்தில் இடம்பெறவுள்ளது.

சமீபத்தில் நடந்த ஐ.பி.எல். போட்டியில் சம்பியன் பட்டம் பெற்ற சென்னை சூப்பர் கிங்ஸ், 2ஆவது இடத்தை பெங்களூர் ரோயல் சேலஞ்சர்ஸ், 3ஆவது இடத்தைப் பிடித்த மும்பை இந்தியன்ஸ் ஆகிய அணிகள் நேரடியாக தகுதி பெற்றன. இதேபோல நியூ சவுத் வேல்ஸ், சவுத் அவுஸ்ரேலியன் ரெட் பேக்ஸ் (அவுஸ்ரேலியா), கேப் கோப்ராஸ், வாரியர்ஸ் (தென்னாபிரிக்கா) ஆகிய 4 அணிகளும் நேரடியாக தகுதி பெற்றன.

முதலாவது சம்பியன் லீக் ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டித் தொடரில் நியூ சவுத் வேல்ஸ் (அவுஸ்ரேலியா) அணி சம்பியன் பட்டம் பெற்றது. 2010ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடந்த 2ஆவது சம்பியன்ஸ் லீக் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் சம்பியன் பட்டம் வென்றது.

# ஒரு நாள் போட்டியின் ஓய்வு டெஸ்டில் சாதிக்க வழிவகுக்கும்



(லண்டன்)

ஒரு நாள் போட்டியில் ஓய்வு பெறுவதால் என்னுடைய திறமை எந்த வகையிலும் பாதிக்காது. அது டெஸ்ட் போட்டியில் எனது கவனத்தை அதிகரிக்கவும், சாதிக்கவும் வழிவகுக்கும் என ராகுல் ராவிட் தெரிவித்தார். நான் ஒரு நல்ல சூழ்நிலையில் தான் ஓய்வு பெறும் முடிவை எடுத்திருக்கிறேன். அடுத்து டெஸ்ட் போட்டியில் மிகவும் கவனம் செலுத்துவேன். ஒரு நாள் போட்டியில் ஓய்வு பெறுவதால் என்னுடைய திறமை எந்த வகையிலும் பாதிக்காது. கிரிக்கெட்டில் நான் மிகவும் கஷ்டப்பட்டுத் தான் ஒவ்வொரு சூழ்நிலையிலும் முன்னுக்கு வந்தேன். இந்திய கிரிக்கெட்டைப் பொறுத்தவரை நான் எல்லா சூழ்நிலையிலும் ஆடியிருக்கிறேன். தொடக்க வீரர், நடுநிலை வீரர், விக்கெட் கீப்பர் என பல்வேறு கட்டங்களிலும் ஆடி திருப்தியாக விளையாடி இருக்கிறேன். இங்கிலாந்தில் நடந்த போட்டியில் இந்திய அணி சிறப்பாக விளையாட முடியாமல் போனதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம் எனவும் தெரிவித்தார்.

# இரண்டு அரச சார்பற்ற நிறுவனங்களே ஐ.நா செயலரை பிழையாக வழிநடத்துகின்றன

## இப்படிக் கூறுகிறது திவயின பத்திரிகை

(கொழும்பு)

இரண்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் நாயகத்தை பிழையாக வழி நடத்தியுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. அனைத்துலக மன்னிப்புச் சபை மற்றும் இன்டர் நெசனல் க்ரைஸீஸ் குருப் ஆகிய இரண்டு அமைப்புக்களுமே இவ்வாறு பான் கீ மூனை பிழையாக வழிநடத்தியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக அனைத்துலக மன்னிப்புச் சபை 69 பக்க அறிக்கை ஒன்றையும், இன்டர்நெசனல் க்ரைஸீஸ் குருப் 8 பக்க அறிக்கை ஒன்றையும் பான் கீ மூனிடம் ஒப்படைத்துள்ளன. போர் இடம்பெற்ற காலத்தில் வன்னியில் சேவையாற்றிய 21 அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றிய நூற்றுக்கணக்கான விடுதலைப் புலி ஆதரவாளர்களிடம் அனைத்துலக மன்னிப்புச் சபை ஆதாரங்களை திரட்டியுள்ளது.

வன்னிப் போர் தொடர்பில் மீளாய்வு செய்வதற்காக ஐக்கிய நாடுகளினால் நியமிக்கப்பட்டுள்ள தொராயா ஒபேட் அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றியவர் என தெரிவிக்கப்படு கிறது. மகளிர் பிரச்சினைகள் தொடர்பில் செயற்பட்டு வந்த இவர் முதல் தடவையாக போர் தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பான் கீ மூனின் செயற்பாட்டை விமர்சித்து இலங்கை அரசாங்கம் கடிதம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூனின் செயற்பாட்டை விமர்சித்து இலங்கை அரசாங்கம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. நாளை செவ்வாய்க்கிழமையன்று ஐக்கிய நாடுகள் 66வது பொதுச்சபையில் உரையாற்றுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நியூயோர்க் பயணமாகியுள்ளார். இந்தநிலையிலேயே பான் கீ மூனுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தை அனுப்பும் உத்தரவு ஐக்கிய நாடுகளின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹனவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இலங்கையின் போர்க் குற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கையை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பித்தமை, ஐக்கிய நாடுகளின் ஒழுங்குகளை மீறும் செயல் என்று அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பான் கீ மூன் உறுப்பு நாடுகள் விடயத்தில் தனிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்தால், சர்வதேச நாடுகள், அவ்வாறு நடக்காதிருக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வட,கிழக்கு பொலிஸ் சேவைக்கு ஆயிரம் இளைஞர்,யுவதிகள்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு, சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் பேசக்கூடிய ஆயிரம் இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கான நேர்முகப் பரீட்சைகள் அடுத்த மாதம் 22ஆம் திகதி கொழும்பில் நடத்தப்பட உள்ளன.

தமிழ், சிங்களம், முஸ்லீம் பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், இந்த இளைஞர், யுவதிகள் பொலிஸில் இணைத்துக் கொள்ளப்பட உள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனைத் தவிர தமிழ் இளைஞர்கள் 50 உப பொலிஸ் பரிசோதகர்கள் எதிர் வரும் டிசம்பர் மாதம் பொலிஸில் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

# மனித உரிமை மீறல் குறித்து இலங்கை அக்கறை காட்டவேண்டும்

## பிரித்தானிய வெளியுறவுச் செயலர்


(கொழும்பு)

**இந்த வருட இறுதிக்குள் இலங்கை போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தமது அக்கறையை காண்பிக்க வேண்டும் என்று பிரீத்தானிய வெளியுறவுச் செயலாளர் வில்லியம் ஹேக், பிரீத்தானிய வெளியுறவு குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.**

குறித்த காலக்கெடுவுக்குள் இலங்கை குறித்த விடயங்களில் அக்கறை செலுத்தாவிட்டால், இலங்கை அரசாங்கம் தமது கடமையை நிறைவேற்ற வேண்டும் என்ற சர்வதேச அழுத்தங்களுக்கு பிரித்தானியாவும் தீவிரமாக ஆதரவளிக்கும் என்று வில்லியம் ஹேக் எச்சரித்துள்ளார்.

இலங்கையின் போர்க்குற்ற விடயத்தில். பிரித்தானிய வெளியுறவுத்துறை அமைச்சு, உரிய கரிசனையை காட்டவில்லை. சர்வ்தேசத்துடன் இணைந்து இலங்கைக்கு அழுத்தத்தை கொடுக்கவில்லை. அதில் தோல்வி கண்டுள்ளது என்று பிரித்தானிய வெளியுறவு குழு தமது கண்டனத்தை வெளியிட்டிருந்தது.

இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே வில்லியம் ஹேக் இந்த பதிலை வழங்கியுள்ளார். இலங்கையில் இறுதிப்போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் பிரித்தானிய வெளியுறவுக்குழுவின் கருத்துக்களுக்கு தாம் உடன்படுவதாக வில்லியம் ஹேக்



குறிப்பிட்டுள்ளார்.சனல் 4 காணொளியும் இதனை தெளிவாகக் காட்டியுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

# வர்த்தகர்களை இன்னல்களுக்கு அரசாங்கம் உட்படுத்தமாட்டாது

(கொழும்பு)

வர்த்தகர்களை இன்னல்களுக்கு உட்படுத்தும் வகையில் அரசாங்கம் எந்த வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாது என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ உறுதியளித்துள்ளார்.

பொருளாதார மத்திய நிலைய ஒன்றினைந்த வர்த்தக சங்க அதிகாரிகள் மற்றும் அமைச்சர் ஆகியோருக்கிடையே நேற்று விஷேட கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடல் மீகொட பொருளாதார மத்திய நிலையத்தில் இடம் பெற்றது.இதன்போது வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

வர்த்தகர்கள் எதிர்நோக்கும் வேதனம் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. வர்த்தகர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு பெற்று கொடுக்கப்படும் என இதன்போது அமைச்சர் தெரிவித்தார்.

# அளவ்வ ரயில் விபத்து குறித்து விரிவான விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

அளவ்வ ரயில் விபத்து தொடர்பான விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விபத்து இடம்பெற்ற பாதையில் உள்ள சமிக்ஞை கட்டமைப்பை அதிகாரிகள் பரிசோதித்து வருவதாக ரயில்வே போக்குவரத்து பணிப்பாளர் எல்.ஏ.ஆர் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொலிஸாரும் இந்த விபத்துத் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். ரயில்வே அதிகாரிகளுடன் இணைந்து பிரதான ரயில் மார்க்கத்தில் உள்ள சமிக்ஞை கட்டமைப்பு பரிசோதிக்கப்பட்டதாக அளவ்வ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 30 பேர் காயமடைந்துள்ளனர். குறித்த மூவரும் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டபோது உயிரிழந்திருந்ததாக அளவ்வ வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எச்.எம்.ஏ ஹேரத் குறிப்பிட்டார்.

ரயில் சாரதி உதவியாளர் வெளிநாட்டு பிரஜை அகியோரே உயிரிழந்துள்ளனர். விபத்தில் காயமடைந்த இரண்டு பேர் அளவ்வ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதேவேளை அளவ்வ வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைகளுக்கு மாற்றப்பட்ட 15 பேர் குருநாகல் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# ஆறுகோடி ரூபா மோசடி செய்த இரு சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

ஆறு கோடி ரூபாவுக்கு மேற்பட்ட பணம் மோசடி செய்யப்பட்டமை தொடர்பில் தேடப்பட்டுவந்த இரண்டு முக்கிய சந்தேகநபர்களை கொழும்பு ஊழல் ஒழிப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர். சந்தேகநபர்களுக்கு எதிராக 25க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் மெக்ஸி ப்ரொக்டர் தெரிவித்துள்ளார்.

கிருலப்பனை மற்றும் மொரட்டுவை ஆகிய பகுதிகளில் சந்தேகநபர்கள் சட்ட விரோத வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிலையங்களை நடத்தி வந்துள்ளமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. பானந்துரை கண்டி கிருலப்பனை நாராஹேன்பிட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களின் பணத்தை இவர்கள் மோசடி செய்துள்ளமையும் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் மாஅதிபர் என். கே இலங்ககோனின் விசேட பணிப்புரையின் பேரில் கொழும்பு ஊழல் ஒழிப்புப் பிரிவினர் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவந்தனர். இதன்போது கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

# விஸ்தரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

இத்தாலிய நிறுவனம் ஒன்றினால் சுமார் 45 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிக்கும் நிலையம் விஸ்தரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஸ்தரிப்புப் பணிகளுக்காக சீனா நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது இந்தத் திட்டம் தொடர்பான நிதி உதவி நடவடிக்கைகள் குறித்த ஆரம்ப அறிக்கையினை சீன வங்கி ஒன்று தயாரித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. உத்தேச விஸ்தரிப்பு நடவடிக்கையின் மூலம் தற்போது நாளாந்தம் சுத்திகரிக்கப்படும் 50 ஆயிரம் பீப்பாய் மசகு எண்ணெய்யின் பிரமாணம் ஒரு இலட்சம் வரை அதிகரிக்க முடியும் என நம்பப்படுகின்றது.

# இலங்கை - ரஷ்யா இடையிலான நேரடிவிமான சேவை ஆரம்பம்

(கொழும்பு)

வரலாற்றில் முதல்முறையாக ரஷ்யாவின் மொஸ்கோவுக்கான விமானப் பயணத்தை சிறிலங்கன் எயார்வேஸ் விமான சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கும் மொஸ்கோவின் டோம்டெடோவோ விமான நிலையத்துக்கும் இடையே வாராந்தம் இரு சேவைகள் இடம்பெறும்.

சிறிலங்கன் விமான சேவையின் யூஎல் 531 விமானம் நேற்றுக் காலை 7.20 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சரித்திரபூர்வமான முதலாவது மொஸ்கோ பயணத்தை ஆரம்பித்தது.

இலங்கையில் உள்ள ரஷ்ய தூதுவர் விலாடிமிர் பி. மிக்யாலோவ், திருமதி மிக்யாலோவ், சிறிலங்கன் விமான சேவையின் வர்த்தக நடவடிக்கைகளுக்கான பொறுப்பதிகாரி மொஹமட் பசீல், ரஷ்யா மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவுக்கான பிராந்திய முகாமையாளர் லால் பெரேரா மற்றும் சிறிலங்கன் விமான சேவையின் பிரதிநிதிகளும் இதில் பயணமாகினர்.

இந்த விமானம் துபாய் வழியாகச் சென்று அதே தினம் பிற்பகல் 4.40 மணிக்கு மொஸ்கோவைச் சென்றடைந்தது.

32. வணிகமொன்று தனது பொறித் தொகுதியின் பெறுமானத் தேய்வை ஒடுங்குபாக (குன்றும் மீதி) முறையில் ஆண்டொன்றிற்கு 10% படி கணிக்கின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் கொள்வனவு செய்த ரூபா 100000 கிரயமான பொறியொன்றின் பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக் கணக்கிலான மீதி யாது?
1) ரூபா 29000 2) ரூபா 20000 3) ரூபா 19000 4) ரூபா 10000

33. மின்கட்டணக் கணக்கு 1.1.2009 இல் ரூ. 700 செலவு மீதியாகக் காணப்பட்டது. 2009 ஆம் ஆண்டின்போது ரூ. 9200 மின்பட்டியலுக்காகப் பணம் கொடுக்கப்பட்டது. 31.12.2009 இல் மின் கட்டணம் ரூ. 400 வரவு மீதியாக காணப்பட்டது. 2009 இன் இலாப நட்டக் கணக்கில் தாக்கல் செய்யப்படும் பெறுமதி யாது?
1) ரூ. 8100 2) ரூ. 9200 3) ரூ. 9900 4) ரூ. 8800

34. இலாபநோக்கு நிறுவனங்களில் காசுக்கணக்கானது இலாப நோக்கற்ற நிறுவனங்களில் எதனை ஒத்திருக்கும்?
1) வருமானச் செலவுக் கணக்கு 2) திரண்ட நிதிக் கணக்கு
3) கொள்ளல் கொடுத்தல் கணக்கு 4) சந்தாக் கணக்கு

பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 35 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு விடைதருக. ஆரியா வணிகத்தின் 31.12.2009 அன்று உள்ளவாறு தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

| மூலதனம் | வரவு ரூ.) | (செலவு ரூ.) |
|---|---|---|
| தொடக்கத் தொக்கு | 7000 | 150000 |
| கொள்வனவு | 54000 | |
| விற்பனை | | 86500 |
| உட்திரும்பல் | 1700 | |
| வெளித் திரும்பல் | | 1200 |
| மோட்டார் வாகனம் (கிரயம்) | 60000 | |
| தேய்மான ஏற்பாடு (30.06.2009) | | 10000 |
| கட்டடம் | 100000 | |
| காப்புறுதிக் கட்டணம் | 3500 | |
| விற்பனை ஊழியர் சம்பளம் | 7000 | |
| வங்கிக் கடன் வட்டி | 1500 | |
| 12மூ வங்கிக்கடன் | | 20000 |
| காரியாலய ஊழியர் சம்பளம் | 8000 | |
| கடன்பட்டோர் | 22000 | |
| கடன்கொடுத்தோர் | | 15000 |
| பெற்றகழிவு | | 2000 |
| எடுப்பனவு | 2000 | |
| காசு | 20500 | |
| | 287200 | 287200 |

மேலதிக தகவல்கள்
1. 30.06.2009 அன்று - தொக்கு (இருப்பு) ரூ. 9000
2. மோட்டார் வாகனம் கிரயத்தில் 10மூ ஐ வருடாந்தம் பெறுமானத் தேய்வு செய்தல் வேண்டும்.

35. ஆரியா வணிகத்தில் 30.06.2009 இல் முடிவடைந்த ஆண்டில் விற்பனை செய்த பண்டங்களின் கிரயம்.
1) ரூ. 57800 2) ரூ. 47800 3) ரூ. 50800 4) ரூ. 48700

36. 30.06.2009 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மொத்த இலாபம்.
1) ரூ. 35000 2) ரூ. 34000 3) ரூ. 36000 4) ரூ. 33000

37. இவ்வணிகம் தயாரித்த இலாப நட்டக் கணக்கில் காட்டப்பட்ட நிலைய நிர்வாகச் செலவுகளின் மொத்தம்.
1) ரூ. 18500 2) ரூ. 15000 3) ரூ. 10500 4) ரூ. 11500

38. இவ்வணிகத்தின் இலாபநட்டக் கணக்கில் காட்டப்படும் பிற வருமானங்களின் மொத்தம்
1) ரூ. 4980 2) ரூ. 4500 3) ரூ. 4550 4) ரூ. 2500

39. இவ் வணிகத்தில் 30.06.2009 அன்று ஐந்தொகையில் காட்டப்படும் மோட்டார் வாகனத்தின் தேறிய பெறுமானம்.
1) ரூ. 44000 2) ரூ. 60000 3) ரூ. 144000 4) ரூ. 16000

40. இவ் வணிகத்தின் இலாப நட்டக் கணக்கில் வங்கிக் கடன் வட்டியாக காட்டப்பட வேண்டிய தொகை.
1) ரூ. 2400 2) ரூ. 1500 3) ரூ. 3900 4) ரூ. 900






திரு. T.S.திலக் (ஆசிரியர்)

# க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011

நேரம் - 1 மணி

# கல்வி முரசு

## வணிகக் கல்வியும் கணக்கீடும் - பகுதி I


S.சுகுமாரன் (ஆசிரியர்)

பாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. பின்வருவன சில செயற்பாடுகள் ஆகும்.
A. வியாபாரம் B. போக்குவரத்து C. நுகர்வு D. கைத்தொழில்
E. நேர் உற்பத்தி F. நடித்தல் G. தரகுத் தொழில்
இவற்றில் வணிகச் செயற்பாடுகளைக் கொண்ட தொகுதியைத் தெரிவுசெய்க.
1) A,B,C,D,E 2) A,B,D,F,G 3) B,C,D,E,F 4) C,D,E,F,G

02. குடிப்பதற்காக குளிர்பானப் போத்தல் ஒன்றை ரூ. 80 செலுத்தி கொள்வனவு செய்தல் பணத்தின் எத்தொழிற்பாட்டைக் குறிக்கும்.
1) பரிமாற்றூடகம் 2) பெறுமான அளவீடு
3) பெறுமானத்திரட்டு 4) பிற்போட்ட கொடுப்பனவு

03. பண்டமாற்று வியாபாரம் தோன்றித் தொழிற்பட அடிப்படையாக அமைந்த காரணி யாது?
1) பணப் பாவனை 2) துணைச் சேவைகள் 3) மிகை உற்பத்தி 4) பரிமாற்றம்

04. பெரும்பாலான வணிகங்கள் சிறந்த வணிக எண்ணங்களைக் கொண்டிருப்பினும் பல வணிகங்கள் தோல்வியடைந்தமைக்கு பிரதான காணரம்.
1) போதிய மூலதனமின்மை 2) வணிகத் திட்டமின்மை
3) அறவிடமுடியாத கடன்நிலை 4) அரசாங்க ஆதரவு இன்மை

05. பொதுவாக வணிகத் திட்டம் எதனை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும்.
1) தூரநோக்கு 2) இலட்சிய நோக்கு 3) குறிக்கோள் 4) நோக்கம்

06. யார், என்ன, எப்பொழுது, எங்கே, ஏன் என்பவற்றை உள்ளடக்கிய வணிக 5W கட்டமைப்பு தொடர்புடையது.
1) சமூக நடத்தை 2) வணிகர்களின் நடத்தை
3) நுகர்வோர் நடத்தை 4) அரசாங்க நடத்தை

07. எல்லா வகையான தொடர்பாடல் செயன்முறைகளிலும் இல்லாத அம்சம்?
1) செய்தி 2) ஊடகம் 3) துலங்கல் 4) பின்னூட்டல்

08. திறைசேரி உண்டியல்களின் முக்கியமான சரியான இயல்பு யாது?
1) கூடிய வட்டி 2) அரசாங்க உத்தரவாதம்
3) குறுங்கால முதலீட்டுக் கருவி 4)மேற்சொன்னவை யாவும்

09. காசோலையில் புறுக்குறிப்பிடல் என்பதால் கருதப்படுவது யாது?
1) இரு சமாந்தரக்கோடுகள் ஏற்படுத்தல்
2) நடைமுறைக் கணக்குடையவர் முன்புறத்தில் கையொப்பமிடல்
3) காசோலைக்குரியவர் பின்புறத்தில் பெறுபவர் முன்பாக பெயரை எழுதுதல்
4) காசோலைக்குரியவர் பின்புறத்தில் கையொப்பமிடல்

10. பேக்கரி வணிகமொன்றினால் செய்யப்பட்ட பின்வரும் செலவுகளுள் நேர்பொருள் கிரயமாக கருதக்கூடியது யாது?
1) கோதுமை மா 2) மாஜரின் 3) உப்பு 4) எண்ணெய்

11. பின்வரும் வணிக நிதித் தேவைகளுள் குறுங்கால நிதித் தேவையாகக் கருதப்படுவது யாது?
1) பொறியொன்றினைக் கொள்வனவு செய்தல்
2) சரக்கைக் கொள்வனவு செய்தல்
3) சரக்கைக் கொண்டு செல்வதற்காக லொறியைக் கொள்வனவு செய்தல்
4) கட்டிடத்தில் சரக்கைப் பேணுவதற்காக குளிர்சாதனங்களைப் பொருத்துதல்

12. இலக்கு நுகர்வோர் என்பவர் யார்?
1) சந்தையில் உள்ள நுகர்வோரில் தெரிவு செய்த ஒரு குழுவினர்
2) சந்தையில் உள்ள நுகர்வோரில் தெரிவு செய்த ஒன்று அல்லது மேற்பட்ட குழுவினர்
3) சந்தையில் உள்ள அனைத்து நுகர்வோர் குழுவினர்
4) சந்தையில் உள்ள அனைத்து நுகர்வோர்

13. வணிகமொன்றுக்கு சிவன் என்பவர் ரூ. 20000 செலுத்த வேண்டும். சிவனிடம் கடனைத் தீர்க்கும் ஆற்றல் இல்லை. சிவன் தனது மோட்டார் வாகனத்தை வணிகத்தின் கடனுக்காக கொடுக்கின்றார். இந்நிகழ்வினைப் பதிவதற்காக துணை ஏடு?
1) பொதுத்தினசேரி 2) கொள்வனவு நாளேடு 3) உட்திரும்பல் நாளேடு 4) காசேடு

14. காசேட்டின்படி வங்கிமீதி ரூ. 12000 வங்கிக்கூற்றின்படி வங்கிமீதி ரூ. 9000 ரூ. 3000 வேறுபாட்டைத் தோற்றுவித்த காசோலை.
1) மாற்றப்படாத காசோலை 2) வசூலிக்கப்படாத காசோலை
3) நேரடி வைப்புச் செய்த காசோலை 4) மறுக்கப்பட்ட காசோலை

15. 1.1.2009ல் கடன்கொடுத்தோர் கணக்கு மீதி ரூ. 13400. 2009ஆம் ஆண்டு முழுவதும் செலுத்திய தொகை ரூ. 45600. 31.12.2009ல் கடன்கொடுத்தோர் கணக்கு மீதி ரூ. 12340 ஆயின் குறித்த கால கடன்கொள்வனவு யாது?
1) ரூ. 44540 2) ரூ. 57940 3) ரூ. 25740 4) ரூ. 39560

16. வணிகத்தினால் முதலில் திருப்பிச் செலுத்த வேண்டியது?
1) வங்கிக்கடன்கணக்கு 2) வங்கிமேலதிகப்பற்று
3) அட்டுறு மின்கட்டணம் 4) கடன்கொடுத்தோர்

17. உரிமையாண்மையில் அதிகரிப்பை ஏற்படுத்துவது?
1) சரக்குப் பற்று 2) காசுப் பற்று 3) இலாபம் 4) நட்டம்

18. இலாப நட்டக்கணக்கில் உள்ளடக்கப்படாத செலவினவகை?
1) நிலைய நிர்வாகச் செலவு 2) விற்பனை விநியோகச் செலவு
3) நிதி ஏனைய செலவு 4) ஆலை மேந்தலைச் செலவு

19. காசேடு இரட்டைத் தொழிற்பாட்டை மேற்கொள்ள உதவுகின்றது. அத்தொழிற்பாடுகளாவன?
1) காசு பெறுதல், காசு கொடுத்தல்
2) காசுக் கொடுக்கல் வாங்கல், வங்கிக் கொடுக்கல் வாங்கல்
3) மூல ஆவணமாகவும் பேரேடாகவும்
4) மூலப் பதிவேடாகவும்,பேரேடாகவும்

20. மோட்டார் வாகனம் கிரயம் ரூ. 20000 ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு ரூ. 3000 வாகனத்தின் எஞ்சிய பெறுமதி ரூ. 5000 விளைதிறனுடைய ஆயுள் காலம் எத்தனை வருடங்கள்?
1) 15 வருடங்கள் 2) 5 வருடங்கள் 3) 10 வருடங்கள் 4) 20 வருடங்கள்

21. வணிகத்தின் மிக்க திரவத்தன்மை வாய்ந்த சொத்து?
1) சரக்கிருப்பு 2) வங்கிக்கடன் 3) வங்கியிலுள்ள காசு 4) கையிலுள்ள காசு

22. அறவிடமுடியாக் கடன் ஏற்படுவதற்கான காரணம்?
1) கடன்பட்டவர் இறத்தல் 2) கடன்பட்டவர் வகையற்றவராகுதல்
3) கடன்பட்டவர் மறைதல் 4) மேற்சொன்னவை யாவும்

23. குமார் என்பவர் ரூபா 20000 ஐ முதலிட்டு ஒரு வணிகத்தை ஆரம்பித்தார். அதே நாளில் வங்கியில் இருந்து கடனாக ரூபா 10000 பெற்றார். விற்பனை செய்வதற்காக ரூ. 5000 பெறுமதியான சரக்குகளை ரூ. 500 போக்குவரத்துச் செலவாக செலுத்திக் கொள்வனவு செய்தார். மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கான சரியான கணக்கீட்டுச் சமன்பாட்டைத் தெரிவு செய்யுமாறு நீர் கேட்கப்படுகின்றீர்.
1) மூலதனம் 20000 + வங்கிக்கடன் 10000 = காசு 24500 + சரக்கிருப்பு 5500
2) மூலதனம் 19500 + வங்கிக்கடன் 10000 = காசு 24500 + சரக்கிருப்பு 5000
3) மூலதனம் 20000 + வங்கிக்கடன் 10000 = காசு 30000
4) மூலதனம் 19500 + வங்கிக்கடன் 10000 = காசு 29500



24. நசீர் என்பவரிடம் இருந்து பெற்ற ரூபா 2000 காசோலை மறுக்கப்பட்டதற்குப் பொருத்தமான சரியான இரட்டைப் பதிவை தெரிவு செய்க.


| | | |
|---|---|---|
| 1) | நசீர் க/கு | வரவு 2000 |
| | காசேடு | செலவு 2000 |
| 2) | காசேடு | வரவு 2000 |
| | நசீர் க/கு | செலவு 2000 |
| 3) | நசீர் க/கு | வரவு 2000 |
| | விற்பனை க/கு | செலவு 2000 |
| 4) | கொள்வனவு க/கு | வரவு 2000 |
| | நசீர் க/கு | செலவு 2000 |

25. 1000 அலகுகளை உற்பத்தி செய்வதற்கு ஏற்பட்ட நேர்ச் செலவுகள் ரூபா 35000 ஆக இருந்தது. மேந்தலைக் கிரயம் ரூபா 15000 ஆகும். கிரயத்தின் மீது 10% இலாப எல்லையை எய்துவதற்கு அலகு ஒன்றின் விற்பனை விலையாக இருத்தல் வேண்டும்.
1) ரூபா 15 2) ரூபா 16.50 3) ரூபா 38.50 4) ரூபா 55


26. வளங்களை வீணாக்காது மிகக் குறைந்த செலவில் அவற்றைப் பயன்படுத்துதல் எவ்வாறு அழைக்கப்படும்?
1) வினைத்திறன் 2) ஒழுங்கமைத்தல் 3) பயனுறுதிப்பாடு 4) கட்டுப்பாடு

27. முயற்சியாளர் ஒருவரது பிரதான தொழிற்பாடு எதுவாக இருத்தல் வேண்டும்?
1) வணிக முகாமையில் பங்குபற்றுதல் 2) புத்தாக்கங்களை மேற்கொள்ளுதல்
3) முதலீடு செய்வதற்குக் கலந்தாலோசித்தல் 4)இலாபங்களை உச்சமயப்படுத்துதல்


28. பின்வருவனவற்றுள் எது ஒரு சிறப்புக் குறுக்குக் கோடிடல் ஆகும்?



1)



2)



3)



4)

29. தனது சேமிப்பிலிருந்து ரூபா 50000 தொகையையும் வங்கிக் கடனாகப் பெற்ற ரூபா 25000 எனும் தொகையையும் முதலீடு செய்து நபரொருவர் ஒரு வணிகத்தை ஆரம்பிக்கும் பொழுது சரியான கணக்கீட்டுச் சமன்பாடாக அமைவது எது?
1) சொத்துக்கள் ரூபா 50000 = மூலதனம் ரூபா 50000
2) சொத்துக்கள் ரூபா 75000 = மூலதனம் ரூபா 75000
3) சொத்துக்கள் ரூபா 75000 = மூலதனம் ரூபா 50000 + பொறுப்புக்கள் ரூபா 25000
4) சொத்துக்கள் ரூபா 75000 = மூலதனம் ரூபா 25000 + பொறுப்புக்கள் ரூபா 50000

30. பரீட்சை மீதியொன்றிலே காட்டப்பட்டுள்ள ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு ரூபா 1000 ஆகும். கடன்பட்டோர் மீதி ரூபா 25000 ஆகும். வணிகத்தின் கோட்பாடுகளுக்கமைய ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு கடன்பட்டோரின் 5% ஆகும். இலாப நட்டக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய தொகை யாது?
1) ரூபா 250 2) ரூபா 1000 3) ரூபா 1250 4) ரூபா 2250

31. பொறியொன்றின் ஆண்டுப் பெறுமானத் தேய்வாக இலாப நட்டக் கணக்கிற்கு ரூபா 12000 வரவு வைக்கப்பட்டது. பொறியின் கழிவுப் பெறுமானம் ரூபா 5000 ஆகவும் அதன் பயனுள்ள ஆயுட் காலம் 10 ஆண்டுகள் ஆகவும் மதிப்பிடப்பட்டது. பெறுமானத் தேய்வு, நேர்கோட்டு முறைக்கு அமையக் கணிக்கப்படும். இப்பொறியின் கிரயம் யாது?
1) ரூபா 125000 2) ரூபா 120000 3) ரூபா 100000 4) ரூபா 15000

# மிகப்பெரிய வெங்காயம்



உலகின் மிகப்பெரிய வெங்காயத்தை விளைவித்து விவசாயி ஒருவர் சாதனை படைத்திருக்கிறார் , 5கிலோ கிராம் நிறையுடைய இந்த வெங்காயம் சாதனைப்புத்தகத்திலும் இடம் பிடித்திருக்கிறது, 25 வருடமாக வெங்காய உற்பத்தியில் பங்களிப்பு செய்த 67 வயதான Gardener Peter Glazebrook என்பவரே இந்த வெங்காய வியாபாரியாவார். இவர் ஓய்வூதியம் பெற்ற ஒருவராவார். கிட்டத்தட்ட 25 ஆண்டுகளாக உலகின் மிகப்பெரிய வெங்காயத்தை உருவாக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வந்ததாக குறிப்பிட்டார். இதற்கு முன்னர் உலகின் மிகப்பெரிய வெங்காயம் என்ற சாதனை கடந்த 2005ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்டிருந்தது. ஆனால் இவர் தற்போது அச்சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்துள்ளார்.

# கண்டதும் காதல் நிஜமா?

இல்லை! இது வடிகட்டிய பொய்! தன் மனசுக்குப் பிடிச்சு ஒரு ஆணை அல்லது பெண்ணை ஒருவர் முதல் முறை பார்க்கும்போது அவருக்கு ஏற்படும் உணர்ச்சி 'காமம்' (இச்சை) மட்டுமே. லண்டன் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் உளவியல் பிரிவுத்தலைவர், டாக்டர். டான்மாய் சர்மா, 'கண்டதும் காதல்' குறித்து ஆராய்ச்சி செய்துள்ளார். 18 வயதிலிருந்து 50வயது வரையிலான 80பேர்களிடம் ஆய்வு மேற்கொண்டார். பலவித உணர்ச்சிகளை Magnatic Resonance Imagine Scan மூலம் ஆய்வு செய்தார். அப்போது தாபத்துடன் காதல் பார்வை பார்த்த ஒரு ஜோடியின் உணர்ச்சிகள், உடலுறவு கொள்ளும்போது ஏற்படும் உணர்ச்சிகள், விபத்து, உயிரற்ற சடலங் களைப் பார்க்கும்போது ஏற்படும் உணர்ச்சிகள் என்று பல வகை ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.



இந்த ஆராய்ச்சிகள் மூலம் ஒரு பெண்ணைக் கண்டதும் ஆணின் மனதில் காமத்திற்குத் தான் முதலிடம் என்றும் பிறகுதான் காதல் என்றும் தெரிய வந்தது. மேலும் காதல் என்பதும் செக்ஸ் உணர்வுகளும் மூளையின் பல பகுதிகளைத் தூண்டி அன்பையும் விருப்பத்தையும் ஏற்படுத்துகின்றன. மூளையில் இவ்வுணர்ச்சிகளைத் தூண்டும் பகுதிகளுக்கு அதிகமானளவு ஒக்ஸிஜனையும் இரத்தத்தையும் எடுத்துச் செல்ல இவ்வுணர்ச்சிகளே காரணமாக அமைகின்றன.

# கைதட்டினால் காதால் இரத்தம் வரும்



சீனாவைச் சேர்ந்த 70 வயதான ஜாங் குவான் எனும் வயோதிபர் வித்தியாசமான ஒரு திறமையுடையவராகத் திகழகிறார். இவர் கைதட்டும் ஓசை ஹெலிகொப்டர் தனது விசிறிகளை சுழற்றும் சத்தத்தைப்போன்று இரைச்சல் உடையதாக இருக்கிறதாம். ஹெலிக்கொப்டரின் இரைச்சலை விட சற்று குறைவாகவே இவரது கைதட்டல் சத்தம் இருக்கிறதாம். இது பற்றி குறிப்பிட்ட அவர் தான் கைதட்டும் போது ஏற்படும் இரைச்சலால் எனது காதுகளில வலி ஏற்படுவது உண்டு எனக் குறிபபிட்டுள்ளார். ஒரு கெட்ட செய்தி என்னவென்றால் இவர் வசிக்கும் பிரதேசத்தில் இவ்வாறு பெரும் இரைச்சலுடன் கைதட்டி சத்தம் ஏற்படுத்துவதற்காக சூழல் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் போடும் சத்தம் சுற்றுப்புறத்தை மாசுபடுத்துவதாக கூறியே கைதுசெய்துள்ளனர்.

# முகம் இல்லாமல் பிறந்த குழந்தை

அமெரிக்காவில் சில வருடங்களுக்கு முன்னர் பிறந்த பெண்குழந்தைதான் Julianna. இவரது தந்தை ஒரு கடற்படை அதிகாரி. அவரது அம்மா Collins Syndrome ஒரு ஆசிரியை. ஆனால் இவர்களுக்கு பிறந்த குழந்தையோ முகம் முழுமையாக இன்றி முற்றிலும் சிதைநத நிலையில் பிறந்துள்ளது.



குழந்தையின் அசாதாரண நிலையைக் கண்டு வைத்தியர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளதோடு இது முற்றிலும் மாறுபட்ட ஒரு சம்பவம் எனவும் தெரிவித்தனர். இச்சிறுமியின் நிலைமை தொடர்பில் கருத்துத தெரிவித்த வைத்தியர்கள் சாதாரண மனிதனின் முகத்தில் காணப்படுகின்ற சதை எலும்புகளில் இவருக்கு 40% சதவீத எலும்புகள் இல்லாமல் காணப்படுவதாக தெரிவித்தனர். மேலும் சிறுமியின் தாடை, பற்கள், காது, கண்கள்,மூக்கு என அத்தனை அங்கங்களும் வினோதமான முறையில் அமைந்துள்ளன. இதனால பெற்றோர்கள் பெரிதும் கவலைப்படுவதாகவும் தெரிவித்தனர்.


இதுவரை 20 பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. எனினும் சத்திர சிகிச்சை மூலம் ஒருபோதும் முற்றிலுமாக சரிசெய்ய முடியாது எனவும் வைத்தியர்கள் தெரிவித்தார்கள். குறித்த சிறுமி குழாய் மூலமாகவே சுவாசித்து வருகிறார். மற்றவர்களுடன் சிரித்துப் பழகி வருவதாகவும், வாசிக்கப் பழகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது பற்றி கருத்துத் தெரிவித்த சிறுமியின் தயார் இதெல்லாம இறைவன் எமக்கு தந்த சோதனைகளே.. இது பற்றி கவ லைப்பட்டாலும் இந்த உலகிற்கு நாம் ஒரு வினோதமான குழந்தையை காட்டியிருக்கிறோம் எனத் தெரிவித்தார்.

# இறால் கோதில் மோட்டார் சைக்கிள்



ஒரு தொகை இறால் கோதில் உருவாக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் படங்கள் இவை. முன்புகூட வித்தியாசமான பொருட்களில் மோட்டார் சைக்கிள்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் இறால் கோதைப் பயன்படுத்தி மோட்டார் சைக்கிளை எவரும் ஆக்கி இருக்கவில்லை. தாய்லாந்து நாட்டவரான பிரதம சமையல் காரர் ஒருவர் சீனாவில் இறால் கோதிலான மோட்டார் சைக்கிள்களை செயலமர்வு ஒன்றில் வைத்து உருவாக்கி உள்ளார்.

# விற்பனைக்கு வந்தாச்சு பேஸ்புக் மொபைல்கள்



நம்மாட்கள் காலையில் தூங்கி எழுந்து குளிக்கிறார்களோ இல்லையோ, நேராகச் சென்று கம்ப்யூட்டரைத் திறந்து பேஸ் புக்கைத் திறந்து என்னென் வந்திருக்கு என்று பார்ப்பதை வழக்கமாக வைத்திருக்கிறார்கள்.

காலையில் எழுந்து பேஸ் புக்கைப் பார்க்கவில்லை என்றால் அன்றைக்கு வேலையே ஓடாது. அதே நினைப்பாக இருப்பார்கள் அவர்களுக்கே தெரியாமல் அவர்களை இப்படி அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது பேஸ்புக் தளம்.

பேஸ் புக்கின் பரந்து விரிந்த நண்பர்கள் வட்ட இணைப்பே இப்படிப் பலரை அடிமையாக்கி வைத்திருக்கிறது. இவ்வாறானவர்களைக் கருத்தில் கொண்டு இப்போது வந்திருக்கின்றன பேஸ்புக் மொபைல் போன்கள்.

வோடோபோன் நிறுவனம் புதிதாக Vodafone555 blue என்ற மொபைலை அறிமுகம்செய்து வைத்துள்ளது. இது முழுக்க முழுக்க பிரபல சமூக இணையத் தளமான பேஸ்புக் தள உபயோகிப்பாளர்களுக்கு என்று தயாரிக்கப்பட்டுள்ளது. பேஸ்புக்கின் அபார வளர்ச்சியையும் வாசகர்களின் எண்ணிக்கையையும் கண்டு பேஸ்புக் தளத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த போன்களை ஒரே பட்டனை அழுத்தினால் பேஸ்புக் தளத்திற்கு செல்லும் வகையில் மிகவும் அழகாகவும் பல்வேறு வசதிகளுடனும் இதனை வடிவமைத்துள்ளது வோடபோன் நிறுவனம். இதன் விலையும் அதிகமில்லை வெறும் 4950 தான் (இந்திய விலை)

2.4 inch display (no touch screen), Navigation through an optical touchpad, Full QWERTY keypad, 2MP camera with flash, FM Radio with 3.5 mm jack, Loaded with Opera Mini 5 browser, Bluetooth 2.1 and Micro USB 2.0, 40MB internal memory that is expandable up to 16GB with MircoSD

நீங்கள் பேஸ்புக்கிற்கு அடிமை என்றால் இந்த மொபைல் கண்டிப்பாக உங்க கையில் இருந்தால் போதும் எப்பொழுதும் பேஸ்புக்கில் இருக்கலாம்.

# பல்வேறு வகையான கோப்புக்களை ஓரிடத்தில் திறக்க...

நாம் கணினியில் பல்வேறுவகையான கோப்புக்களை பயன்படுத்துகின்றோம். உதாரணமாக போட்டோ, ஓடியோ, வீடியோ, PDF, OFFICE கோப்புக்கள் என பல. இவற்றை ஓப்பன் செய்து கொள்வதாயின் அந்தந்த கோப்புக்களை திறக்கப் பயன்படும் மென்பொருட்களிலே திறக்க முடியும். பலதரப்பட்ட கோப்புக்களை ஓரிடத்தில் ஓப்பன் செய்துகொள்ள துணை புரிகிறது FREE OPENER மென்பொருள். இந்த மென்பொருள் மூலம் 70க்கு மேற்பட்ட வகையான கோப்புக்களை திறந்து கொள்ள முடியும்.

இதன் சிறப்பம்சம்

- JPEG, GIF, bmp போன்று பல்வேறு போர்மட் புகைப் படங்களை திறந்து பார்க்க முடியும்,
- Avi, flv, mid, mkv, mp3, mp4, mpeg, mpg, mov, wmv போன்ற மீடியா பைல்களை திறந்து மீடியா பிளேயர் ஆக பயன்படுத்த முடியும்.
- Photoshop, pdf, html, office, java , DOC, xls போன்ற கோப்புக்களையும் இலகுவாக திறந்து கொள்ளலாம்.

இதுபோன்ற 70 க்கு மேற்பட்ட போர்மெட்களிலுள்ள கோப்புக்களை திறந்து பயன்படுத்த இந்த மென்பொருள் உதவுகின்றது. இந்த மென்பொருள் விண்டோஸ் இயங்கு தளத்தில் செயற்பட வல்ல மிகச் சிறந்த பயனுள்ள ஓர் மென்பொருளாகும் . அத்துடன் இதன் அளவு 20MB ஆகும் .

தரவிறக்கம் செய்ய:- http://www.freeopener.com/

# மக்கள் நலனுக்கு மோடி உண்ணாவிரதம்

# காங்கிரஸ்காரர் போட்டிக்கு உண்ணாவிரதம்




குஜராத் முதல் மந்திரி நரேந்திரமோடி மத நல்லிணக்கம், அமைதி, ஒற்றுமையை வலியுறுத்தி சத்பாவ்னா என்ற பெயரில் 3 நாள்(72 மணி நேரம்) உண்ணாவிரதத்தை நேற்றுமுன்தினம் ஆமதாபாத்தில் தொடங்கினார்.

குஜராத் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா மண்டபத்தில் உண்ணாவிரதம் இருக்கிறார். தொடக்க நிகழ்ச்சியில் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்கள் அத்வானி, ராஜ்நாத் சிங், அருண் ஜெட்லி, ரவிசங்கர் பிரசாத், பஞ்சாப் முதல் மந்திரி பிரகாஷ் சிங் பாதல், இமாசல பிரதேச முதல் மந்திரி பிரேம்குமார் துமால் உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில் நரேந்திர மோடிக்குப் போட்டியாக காங்கிரசார் ஆமதாபாத்தில் காந்தியின் சபர்மதி ஆசிரமம் அருகில் 3 நாள் போட்டி உண்ணாவிரதம் இருக்கிறார்கள். முன்னாள் மத்திய மந்திரி சங்கர் சிங்கவேலா மாநில காங்கிரஸ் தலைவர் அர்ஜுன் மோத்வாடியா தலைமையில் ஏராளமான காங்கிரசார் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அவர்களும் நேற்று இரண்டாம் நாளாக உண்ணாவிரதம் இருக்கிறார்கள்.

நரேந்திரமோடியின் உண்ணாவிரதத்தில் இந்து சாமியார்கள், துறவிகள் தவிர கிறிஸ்தவ பாதிரியார்கள், முஸ்லிம் தலைவர்களும் கலந்து கொண்டனர். அவர்கள் மேடைக்குச் சென்று நரேந்திர மோடியைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர். உண்ணாவிரதத்திலும் பங்கேற்றனர்.

நரேந்திரமோடியின் உண்ணா விரதம் இந்தியா முழுவதும் வரவேற்பை ஏற்படுத்தி உள்ளது. குஜராத் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பொதுமக்கள்,பல்வேறு அமைப்பினர் அணி அணியாக வந்து நரேந்திர மோடியைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர். பொதுமக்களில் சிலர் நரேந்திர மோடியிடம் கோரிக்கை மனுக்களையும் அளித்தனர். அவற்றை நரேந்திர மோடி பெற்றுக் கொண்டார்.







# ஜெயலலிதாவின் முடிவால் கூட்டணிக்குள் குழப்பம்



(சென்னை)

திருச்சி மேற்குத் தொகுதிக்கு நடைபெற உள்ள இடைத் தேர்தலில் போட்டியிடும் அ.தி.மு.க., வேட்பாளர் பெயர் மற்றும் விரைவில் நடைபெற உள்ள உள்ளூராட்சித் தேர்தலில் மாநகராட்சித் தேர்தலில் போட்டியிட உள்ள மேயர்களின் பெயர்ப பட்டியலை அ.தி.மு.க.,பொதுச்செயலாளர் ஜெயலலிதா வெளியிட்டார். வேட்பாளர் பெயர்ப் பட்டியலில் கூட்டணிக்கட்சிகளின் பெயர் எவையும் பட்டியலில் இல்லாத காரணத்தால் கூட்டணிக் கட்சிகளுக்கு இடையில் கருத்து முரண்பாடு தோன்றியுள்ளது.

எதிர்க்கட்சியாக இருக்கிற எங்களிடம் இடப் பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்தாமல் அ.தி.மு.க., தனிச்சையாக மாநகராட்சி வேட்பாளர்கள் பட்டியலை அறிவித்தது நியாயமா? எங்களை மதிக்காதவர்களை நாங்கள் தேடிச்செல்ல மாட்டோம். மதியாத வாசலை மிதிக்க வேண்டாம் என எதிர்கட்சித் தலைவர் விஜயகாந்த் தனது கட்சியினரிடம் ஆவேசமாகக் கேட்டுள்ளதாக தெரிய வருகின்றது. இந்த நிலையில் கம்யூனிஸ்ட்கள், தேமு.தி.க உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகள் தனித்துப் போட்டியிடலாம என்று ஒரு தரப்பும், 3ஆவது அணி அமைத்து போட்டியிடலாம் என்று இன்னொரு தரப்பும் கருதுவதாக தெரிகிறது. எனி னும்,தே.மு.தி.க தனியாக போட்டியிடுவதில் ஆர்வமாக உள்ளதாக தெரிகிறது.

சட்டசபைத் தேர்தலைப் போலவே, கடைசி நேரத்தில் ஜெயலலிதா இந்த முறையும் தங்களுக்கு ஒரு சில இடங்களை ஒதுக்குவார் என்ற எதிர்பார்ப்பு கம்யூனிஸ்ட்களிடம் உள்ளது.

# பெரியாரின் 133ஆவது பிறந்தநாள்



பெரியார் எனப் பரவலாக அறியப்படும் ஈ. வெ. இராமசாமி செப்ரெம்பர் 17, 1879 - டிசம்பர் 24, 1973) சமூக சீர்திருத்தத்திற்காகவும், சாதி வேற்றுமையினை அகற்றுவதற்காகவும், மூடநம்பிக்கைகளை மக்களிடமிருந்து களைவதற்காகவும், பெண் விடுதலைக்காகவும் போராடியவர். தமிழகத்தின் மிக முக்கியமான இயக்கமாகக் கருதப்படும் திராவிடர் கழகத்தினைத் தோற்றுவித்தவர் இவருடைய சுயமரியாதை இயக்கமும், பகுத் தறிவு வாதமும் மிகவும் புகழ்பெற்றது.

பெரியாரின் 133ஆவது பிறந்த நாளையொட்டி சென்னை அண்ணா மேம்பாலத்தில் உள்ள பெரியாரின் சிலை மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது. சிலைக்குக் கீழே பெரியாரின் உருவப்படமும் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது. முதல் அமைச்சர் ஜெயலலிதா நேற்றுமுன்தினம் 11 மணிக்கு பெரியாரின் சிலைக்குக் கீழே வைக்கப்பட்டிருந்த அவரது உருவப்படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

# 10 நாளில் கோடீஸ்வரர்

(மும்பாய்)

மும்பாயில் லால்பாக் ராஜா கணபதிக்கு இந்த ஆண்டு 8.80 கோடிப் பணம், 14 கிலோ தங்கம், 250 வெள்ளி நகைகள், தங்கம் மற்றும் வெள்ளியால் செய்யப்பட்ட ஒரு கலசம், 5இலட்சம் மதிப்புள்ள வைரம், ஒரு கிலோ எடை கொண்ட தங்கக் கட்டி, இரண்டு வைர மோதிரங்கள், 2 இலட்சம் மதிப்புள்ள சுவிஸ் வாட்ச்,அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்ரேலியா,சீனா, அரேபியா,மொரிசீயஸ், சுவிஸ் நாட்டு கரன்சி போன்றவற்றை பக்தர்கள் காணிக்கையாக செலுத்தியுள்ளனர்.



செப்ரெம்பர் 1ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை கொண்டாடப்பட்ட கணபதி விழாவின் போதுதே இக் காணிக்கைகளை பக்தர்கள் வழங்கி இருந்தார்கள்.

# குறிஞ்சி மலர்கள்

(ஊட்டி)

மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் நீல நிறக் குறிஞ்சி மலர்கள் ஊட்டி அருகேயுள்ள தொட்டபெட்டா சிகரத்தில் பூத்துக் குலுங்குகிறது.

மலையில் பூக்கும் குறிஞ்சி மலர்கள் ஒரு மாதம், 3 மாதம், 6 மாதம், ஆண்டிற்கு ஒரு முறை, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை, 6 ஆண்டுகளுக்கு ஒரு முறை மற்றும் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை என பூக்கும் தன்மை கொண்டவை. மேற்கு தொடர்ச்சி மலைகளில், குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் 32 வகையான குறிஞ்சி மலர்கள் பூக்கின்றன. இதில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டும் பூக்கும் குறிஞ்சி மலர்களுக்கு



மவுசு அதிகம்.

நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி அருகேயுள்ள தொட்டபெட்டா மலைச் சிகரத்தில் பார்க்கும் இடங்கள் எல்லாம் குறிஞ்சி மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. இவை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் ஸ்டோபிலாந்தஸ் போலியாசிஸ் என்ற தாவர இனத்தைச் சேர்ந்த குறிஞ்சி மலர்கள். வெள்ளை நிற மலர்களில் சற்று நீல நிறம் கலந்து பூத்துள்ளது.

# ஓவியத்தால் கலாசாரத்தை மீட்கும் முயற்சி




(சென்னை)

சென்னையைச் சேர்ந்த ஓவியர் சந்தான கிருஷ்ணன் (வயது 34) , தன் ஓவியங்கள் மூலம் கலாசாரத்தை மீட்டெடுக்கும் வேலையில் ஈடுபட்டு வருகிறார்.

இவர் 'கதவு' என்ற தொனிப் பொருளில் 30க்கும் மேற்பட்ட ஓவியக் கண்காட்சிகளை நிகழ்த்தியுள்ளார்.

கதவு வெறும் கதவு மட்டும் அல்ல அது வீட்டிற்கு வெளிச்சம் பாய்ச்சும் விளக்கு. நம் பண்பாட்டின், கலாசாரத்தின், குலப் பெருமையின் வெளிப்பாடு. அதனால் தொடர்ந்து கதவுகளை வரைவதன் மூலமாக, சிதைந்து போன நம் கலாசாரத்தை மீட்டெடுக்க முடியும். என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. என்கிறார் சந்தான கிருஷ்ணன்.



முந்தைய கால வீடுகளில், எப்போதும் கதவுகள் திறந்தே இருக்கும். வழிப்போக்கர்கள், உறவினர்கள், அயலார் என எல்லோரும் வந்து புழங்குவதற்கு கதவுகள் அனுமதிக்கும். ஆனால், இன்றைய கதவுகள் அடுத்த வீட்டு இலக்கத்தை கூட தெரிந்து வைத்திருக்காதவை. கதவில் உள்ள நிறிய கண்ணாடி வழியாக வெளியே இருக்கிறவர்களைப் பார்த்த பின் அனுமதிப்பவை. மனிதனின் பேராசையும், பெருங்கோபமும் தான் உறவுகளில் இருந்து நம்மைப் பிரிப்பவை. நம்மில் கண்ணுக்குத் தெரியாமல் பிணைக்கப்பட்டிருக்கும் கண்ணியை அறுந்து விடாமல், கதவுகள் தான் காக்க வேண்டும். அதற்காகத் தான் ஓவியங்கள் மூலம் நான் போராடிக் கொண்டிருக்கிறேன். எல்லாக் கதவுகளும் உடைந்து போய், வெளிச்சம் பரவ வேண்டும் என்பது தான் சந்தான கிருஷ்ணனின் ஆசை.

# டாப்சிக்கு தமிழ் படிப்பிக்கும் மகத்

(சென்னை)

மங்காத்தா படத்தில் அறிமுகமான நடிகர் மகத், ஆடுகளம் வெள்ளாவிப் பொண்ணு டாப்சிக்கு தமிழ் கற்றுக் கொடுக்கிறாராம்.



இவர்களுக்கு இடையே காதல் மலர்ந்துள்ளதாகவும் கோடம்பாக்கத்தில் கிசுகிசுக்கப்படுகிறது. தமிழில் டாப்சி நடித்து ஒருபடம் தான் வெளியாகியுள்ளது. ஆனாலும் அம்மணிக்கு ஏகப்பட்ட வரவேற்பு. இந்நிலையில் இவருக்கும், மங்காத்தா படத்தில் அஜித்துடன் நடித்துள்ள நடிகர் மகத்துக்கும் இடையே காதல் ஏற்பட்டுள்ளதாக கிசுகிசு பரவியுள்ளது. இவர் நடிகர் சிம்புவின் நண்பர் ஆவார். தமிழ்ப்பாட வேளையில் டாப்சியும், மகத்தும் ஒன்றாக ஹோட்டல்களில் கைகோர்த்த படி நடந்து செல்வதைக் காண முடிகிறதாம். மேலும் டாப்சி சூட்டிங்கில் பங்கேற்கும்போது அங்கு மகத் வந்து விடுகிறாராம். சூட்டிங் முடியும் வரை அங்கேயே இருந்து டாப்சியை அழைத்துச் செல்கிறாராம்.

## உலகச் செய்திகள்

# அமெரிக்க விமான விபத்து மூவர் பலி 54 பேர் காயம்



(வொஷிங்டன்)

அமெரிக்காவின் நெவாடா மாநிலத்தில் இடம்பெற்ற விமான விபத்தில் மூவர் உயிரிழந்ததுடன் 54 பேர் காயமடைந்துள்ளனர்.எனினும் காயமடைந்தவர்கள் பலரின் நிலைமை கவலைக்கிடமாகவிருப்பதால், உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் ஒன்றுகூடியிருந்த நிலையில், சாகச நிகழ்வில் ஈடுபட்ட விமானம் வெடித்து சிதறியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.


# லிபிய இடைக்கால அரசுக்கு ஐக்கிய நாடுகள் சபை அங்கீகாரம்

(திரிபோலி)

லிபியாவின் இடைக்கால அரசுக்கு ஐ.நா அங்கீகாரம் அளித்துள்ளது. லிபியாவுக்கு எதிரான பொருளாதார மற்றும் இராணுவ ரீதியான தடைகளைக் களைய இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இதன்மூலம் போரால் சீரழிந்த லிபியா பொருளாதார மற்றும் அரசியல் ஒழுங்கில் மீண்டு வர முடியும். இதற்காக ஐ.நா பாதுகாப்புச் சபையில் 2009ம் ஆண்டுத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

லிபிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, மனித உரிமைகளைக் காப்பது, ஜனநாயக அரசை உருவாக்குவது ஆகியவற்றுக்கான ஐ.நா.வின் புதிய முயற்சிகளை பாதுகாப்பு சபை முழுமையாக அங்கீகரித்தது.

193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா பொதுக்குழுவில், கடாபி அரசை வீழ்த்திய லிபிய இடைக்கால அரசுக்கு ஐ.நா.வில் இடம் அளிப்பதற்கு ஆதரவாக 114 வாக்குகள் கிடைத்தன. எதிராக 17 வாக்குகள் கிடைத்தன. இந்தியா இடைக்கால அரசுக்கு ஆதரவாக வாக்களித்தது.இந்த வாக்கெடுப்பு முடிந்த சில மணி நேரங்களில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனை வரவேற்றுள்ள அமெரிக்கா



வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நடவடிக்கைக்காக லிபிய மக்களைப் பாராட்டுவதாகத் தெரிவித்துள்ளது. பிரிட்டனும் இந்த நடவடிக்கையை வரவேற்றுள்ளது.

இதேவேளை, சர்வதேச நிதியம், உலக வங்கி ஆகியன லிபிய அதிகாரிகளுடன் ஒத்துழைத்து நாட்டின் பொது நிதி மேலாண்மையை, சீர்படுத்த உதவ,வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

30 உறுப்பினர்கள் கொண்ட இந்த அரசில் அனைத்து அரசியல் குழுக்கள், அனைத்துப் பிரதேசங்கள், பெண்கள் உள்ளிட்ட எல்லாத் தரப்பினரும் இடம்பெறுவர் என்று உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தனிநாட்டு அந்தஸ்தினை பாலஸ்தீனத்திற்கு வழங்க முடியாது - கனடா

(ஜெனீவா)

பாலஸ்தீனத்திற்கு தனிநாடு அந்தஸ்து வழங்க முடியாதென கனடா அரசாங்கம் தெரிவித்துள்ளது. பாலஸ்தீனம் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக தனிநாட்டு அந்தஸ்து கோரி போராடிவருகிறது.

பாலஸ்தீனத்திற்கும் அருகில் உள்ள இஸ்ரேல் நாட்டிற்கும் கடுமையான மோதல் நடந்து வருகிறது. இதனால் மேற்கு கரையின் எல்லைப் பகுதியில் இரு தரப்பினரதும் தாக்குதல்கள் நடந்து உயிரிழப்புகள் தொடர்கின்றன.இந்த இரண்டு நாடுகள் மோதிக் கொள்வது உலக நாடுகளுக்கு கவலையை ஏற் படுத்தி உள்ளது. கடந்த 1967ம் ஆண்டு நடந்த போரின் போது பாலஸ்தீனத்தின் மேற்குப் பகுதியில் குறிப்பிட்ட இடத்தை ஆக்கிரமித்து உள்ளது.

அந்த இடத்தில் தங்கள் நாட்டைச் சேர்ந்த யூதர களுக்கு இஸ்ரேல் அரசு குடியிருப்புகளை கட்டி வருகிறது. இதற்கு பாலஸ்தீனம் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

இந்த நிலையில் இந்த மாதம் 23ஆம் திகதி முதல் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டம் நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தில் பாலஸ்தீனத்தின் தனிநாட்டுக் கோரிக்கை வாக்கெடுப்பு நடைபெறும். இந்த வாக்கெடுப்பில் ஒரு தரப்பு நிலையாக தனிநாடு அந்தஸ்து பாலஸ்தீனத்திற்கு வழங்கக் கூடாது என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெடன்யகு கடுமையாக எதிர்த்துவருகிறார்.

அமெரிக்காவும் இஸ்ரேலுக்கு ஆதரவாக பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண வேண்டும் என்று கூறி வருகிறது. இதற்கிடையில் அமெரிக்க கூட்டணியான கனடா பாலஸ்தீன தனிநாடு கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் கூறுகையில்,"ஒரு சார்பு ஆதரவு முடிவு பயனளிக்காது" எனத் தெரிவித்தார்.

# 1080 நாட்கள் உலகைச் சுற்றிய ஜப்பானின் முதிய கடற்பயணி

உலக நாடுகளை கடல் மார்க்கமாக படகின் மூலம் சுற்றி வந்து ஜப்பானைச் சேர்ந்த மினோரு செயிட்டோ என்ற முதியவர் சாதனை படைத்துள்ளார். அவர் 1080 நாட்கள் கடல் நீரில் பயணம் செய்துள்ளார். உலக நாடுகளை கடல் நீரில் கடந்து வந்த சாதனையாளர் பட்டியலில் மிக வயதான நபர் என்ற பெருமையும் மினோருக்கு உள்ளது.

இந்தச் சாதனை வீரர் பயணம் மேற்கொள்ளும் போது ஒரு நிலநடுக்கம், 2 சுனாமி, 2 பனிகட்டிகள் மற்றும் சீறி வந்த கடல் அலைகள், சூறாவளி போன்ற அபாயங்களை எதிர் கொண்டார்.இந்தச் சாதனை வீரருக்கு 77 வயது ஆகிறது. இவருக்கு முதுகு வலி, சிறு நீரகப் பிரச்சினை முழங்கால் அறுவைச்சிகிச்சை போன்றவையும் நடந்து உள்ளது. இதே பிரச்சினைக்காக மாத்திரையும் எடுத்துக் கொள்கிறார்.



இயற்கை பேரிடர் மற்றும் உடல் நோய்கள் ஆகிய இரண்டையும் சமாளித்து மினோரு உலக நாடுகளை கடலில் கடந்து வந்து உள்ளார். அவருக்கு ஜப்பானில் உள்ள யோகோ ஹமா துறைமுகத்தில் பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது.

# வேலை வாய்ப்புச் செய்திகள்

கட்டார்,சவுதிஆரேபியா,சிங்கப்பூர்,ஆப்கானிஸ்தான்,மலேசியா, பாங்கொங்,சைப்பிரஸ் ஆகிய நாடுகளில் பல்வேறு பட்ட வேலை வாய்ப்புக்கள் உள்ளன. வெளிநாட்டில் சென்று வேலைபார்க்கும் ஆர்வமுள்ளவர்கள் இன்று காலை 9.00 மணிக்கு NO: 235 பலாலி வீதி,கோண்டாவில் சந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள Green wich Businees Academy இற்கு தகமைகளுடன் கூடிய சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும் மேலதிக விபரங்களுக்கு 0773483438,0771371617,0215672727இற்கு தொடர்பு கொள்ளவும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகை நிறுவனத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்) 25-60 வயதிற்கு உட்பட்டவர் பகல்,இரவு நேரங்களில் கடமையாற்றக் கூடியவர்,பராமரிப்பாளர் (தேனீர் தயாரிக்கக் கூடிய) தேவை ஆர்வமுள்ளவர்கள் பொது முகாமையாளர்,361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 021 5677602 இற்கு தொடர்பு கொள்ளவும்.

கே.ஆர்.எஸ் உணவு உற்பத்தி நிறுவனத்திற்கு வேலைக்கு ஆட்கள் (பெண்கள் தேவை ஆர்வமுள்ளவர்கள் K.R.S Food Products, K.K.S Road Kodavil (உபதபாலகத்திற்கு எதிரில்) 021 4591537 இற்கு தொடர்பு கொள்ளவும்.

வீட்டிற்கு வந்து 07-10 வயதுப்பிள்ளைகளுக்கு ஆங்கிலம், கணினிப் பாடங்கள் கற்பிக்க ஆண்/பெண் ஆசிரியர் தேவை (வல்வெட்டித்துறை நகரத்துக்குள்) ஆர்வமுள்ளவர்கள் 075 7621331 இற்கு தொடர்பு கொள்ளவும்.

கரவெட்டி பிரதேசத்தில் வசிக்கும் அரச உத்தியோகம் பார்க்கும் குடும்பம் ஒன்றிக்கு வீட்டில் தங்கிநின்று பணிபுரியக் கூடிய பெண் பணியாளர் தேவை விருப்பமுள்ளவர்கள் 0776341216 இற்கு தொடர்பு கொள்ளவும்.

விற்பனைப் பிரதிநிதிகள் தேவை க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த தமிழ்,சிங்களம் சரளமாகப் பேசக்கூடியவரார இருத்தல் வேண்டும் ஆர்வமுள்ளவர்கள் 021 4925849 அல்லது 077 3535581 இற்கு தொடர்பு கொள்ளவும்.

திருநெல்வேலியில் இயங்கும் அழகுசாதனப் பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு பெண் விற்பனையாளர் தேவை திருநெல்வேலிப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் 0776139692 இற்கு தொடர்பு கொள்ளவும்.

Tilko Jaffna City Hotels (Pvt) Ltd இல் Marketing Manager, Gardener (அனுபவமுள்ளவர்) அலுவலக உதவியாளர், சாரதி,Water Plant Tecnican (தொழில் தகமை உடையவர்) தேவை ஆர்வமும் ஆற்றலும் உடையவர்கள் No 70/6 K.K.s. Road,jaffna என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது in fo@tilkojaffna city hotel.com இற்கு மின்னஞ்சல் மூலமாக தொடர்பு கொள்ளவும்

கிளிநொச்சியில் இயங்கும் தளபாட விற்பனைக் காட்சியறைக்குக் கணக்காளர் தேவை கணினி,ஆங்கிலப்புலமை மேலதிக தகமைகளாக எதிர்பார்க்கப்படுகின்றது ஆர்வமுள்ளவர்கள் 0772622032,0213207789 இற்கு தொடர்பு கொள்ளவும்.

மோட்டார் சயிக்கிள் திருத்த வேலையில் முன் அனுபவமுள்ள மெக்கானிக் தேவை பணிபுரிய ஆர்வமுள்ளவர்கள் 0776996501 இற்கு தொடர்பு கொள்ளவும்.

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மருந்து விற்பனை நிலையத்திற்கு சான்றிதழ் உள்ள மருந்து விற்பனையாளர்,மற்றும் பயிற்சி பெற்றவர் உடன் தேவை தகுதியுடையவர்கள் 0774109151 இல் ஹிமால் ஐ தொடர்பு கொள்ளவும்.

கொழும்புத்துறை வீதி,பாண்டியந்தாழ்வில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பார்மசிக்கு பணிபுரிய மருந்தாளர் தேவை தகுதியும், ஆர்வமும் உடையவர்கள் 0776096341 இற்கு தொடர்பு கொள்ளவும்.

கொழும்பைத் தலைமையகமாக கொண்ட Elcardo Industries (pvt) Ltd இற்கு யாழ்ப்பாணம்,கிளிநொச்சி,வவுனியா பிரதேசங்களில் இருந்து பின்வரும் பணியாளர்கள் தேவை இரும்பு ஒட்டு வேலை தெரிந்தவர் (Gas) தொழில் தெரிந்தவர்,பழக விரும்புவர்கள் உதவியாளர்கள் துப்பரவு செய்யும் பணியாளர்கள் ஆர்வமுள்ளவர்கள் 0718709289 இற்கு தொடர்பு கொள்ளவும்.

மிக்ஷர் உற்பத்தி நிறுவனம் ஒன்றிக்கு மேற்பார்வையாளர் (பெண்) பொதியிடல் (பெண்) உற்பத்தியாளர் (ஆண்) ஆர்வமுள்ளவர்கள் 021 320 6870,0779789223 இற்கு தொடர்பு கொள்ளவும்.

பெண் பணியாளர் தேவை நாளை பிற்பகல் 2 மணிக்கு 140,கோயில் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும் மேலதிக விபரங்களுக்கு 021 222 5796 இற்கு தொடர்பு கொள்ளவும்.

வவுனியாவில் உள்ள Hotel Swarkka இற்கு மண்டப பராமரிப்பாளர்,உணவு பரிமாறுபவர்,அறை சுத்திகரிப்பாளர், வரவேற்பாளர் (இரவு/பகல்) ரொட்டி,அப்பம் தயாரிப்பாளர்,அலுவலகப் பொறுப்பாளர் உணவு தங்குமிடம் வழங்கப்படும் இருபாலாரும் 0773405396 இற்கு தொடர்பு கொள்ளவும்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் இரண்டு உணவகங்களுக்கு உணவு பரிமாறுபவர்கள்,பார்சல் கட்டுபவர்,மரக்கறி நறுக்குபவர்,தோசை றொட்டி தயாரிப்பவர்,சமையல் பகுதி வேலை ஆட்கள் சுத்திரிப்பாளர் தேவை இடம்பெயர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் ஆர்வமுள்ளவர்கள் 0777 917758 இற்கு தொடர்பு கொள்ளவும்.

# பிரபலமானவர்களின் புகைப்படங்களுடன் சட்டத்தை மீறும் தேர்தல் பிரசாரம்

## கபே அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரபலமானவர்களின் புகைப்படங்கள் மற்றும் பெயர்களைப் பயன்படுத்தி சில வேட்பாளர்கள் சட்டவிரோத முறையில் விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் ஈடுபடுவதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

பதுளை, கோட்டே, தெஹிவளை - கல்கிஸ்ஸ, முல்லேரியா ஆகிய மாநகர சபைகளுக்காக தமது புதல்வர்களின் பெயர்களை வேட்பு மனுவில் உள்ளடக்கியுள்ள நான்கு தந்தையர்கள் தங்கள் பெயர்களிலேயே தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து தேர்தல்கள் ஆணையாளர் கவனம் செலுத்தியுள்ளதாகக் கூறிய அவர், இளைய வேட்பாளர்களான தங்கள் பிள்ளைகளின் பெயர்களை தங்கள் வேட்பு மனுவில் உள்ளடக்கி தந்தையர்கள் தங்கள் புகைப்படத்துடன் பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவதாக தெரி வித்துள்ளார். இலங்கையில் தேர்தல் சட்டங்களின் பிரகாரம் இந்த நடவடிக்கை குற்றமாக கருதப்படு வதுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர் குற்றத்தை பகிரங்கமாக மேற்கொண்டு வருகின்றனர்.

அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் மக்களை தவறாக வழிநடாத்தும் வகையிலான பிரசார நடவடிக்கைகளை தொடர்ந்து முன் னெடுத்து வருகின்றனர். பதுளை மாவட்டத்தில் இளைய வேட்பாளர் ஒருவர் தனது தந்தையின் புகைப் படத்தையும் பெரையும் பயன்படுத்தி பிரசாரங்களை முன்னெடுப்பது தொடர்பில் தகவல் பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## அக்கராயன் குளத்திலிருந்து நெற்செய்கைக்கு நீர் வழங்கப்படும்

### பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் குளத்திலிருந்து காலபோக நெற்செய்கைக்கு நீர் வழங்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் ந. சுதாகரன் அறிவித்துள்ளார்.

அக்கராயன் குளம் 300 மில்லியன் செலவில் துரிதமாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந் நிலையில் காலபோக நெற்செய்கைக்கு நீர் வழங்கப்படமாட்டாது என்ற செய்தி ஒன்று வெளியாகியிருந்த நிலையில் அக்குளத்தில் இருந்து காலபோக நெற்செய்கைக்கு நீர்வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.


நீர் விநியோகம் வழங்கப்பட்டால் அக்கராயன் குளத்தில் 5 ஆயிரம் ஏக்கர் வரையான நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள முடியும் என இப்பகுதி விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகிறது. (உ-121)

## செல்வச்சந்நிதியில் பிள்ளையார்



தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் உள்ள அரச மரத்தில் பிள்ளையார் உருவம் தோன்றியுள்ளது. இவ் உருவத்திற்கு பட்டுச் சாத்தி பூஜைகள் நடைபெறுகின்றது. இதனை ஏராளமான பக்தர்கள் சென்று பார்வையிடுகின்றனர். (18)

## மிருகங்களை வெட்டுவோர் கையை வெட்டுவேன் - மேர்வின்



(கொழும்பு)

மிருகங்களை யாராவது கொன்றால் அவர்களின் கையை வெட்டுவேன் என பொதுமக்கள் உறவுகள் மற்றும் பொதுமக்கள் விவகார அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரித்துள்ளார். களனி தர்மாலோக வித்தியாலயத்தில் கணினிப் பிரிவொன்றை திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மனிதர்களுக்கு பசுக்கள் செய்யும் நன்மைகளைச் சுட்டிக்காட்டிய அமைச்சர் இனிமேல் வீடுகளில் உணவுக்காக இறைச்சி வாங்க வேண்டாம் என பெற்றோரைக் கோருமாறு மாணவர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

கம்பஹா மாவட்டத்தில் மாடுகளை கொல்வதை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை தான் மேற்கொள்ளவுள்ளதாக அவர் உறுதியளித்தார். இப் பாடசாலை அதிபர் ஏ.ஜி. நிமல் ஜயவீர, பிரதி அதிபர் வண.நாபாகொட சுமணதிஸ்ஸ தேரோ ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

## கொழும்பில் சர்வதேச புத்தகக் கண்காட்சி 400 புத்தகங்கள் வெளியிட ஏற்பாடு



(கொழும்பு)

சர்வதேச புத்தகக் கண்காட்சி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி மண்டபத்தில் நேற்று முன்தினம் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தக் கண்காட்சி வரும் 25ஆம் திகதி வரை நடைபெறும். இம்முறை சுமார் 450 காட்சி அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. பல மொழிகளிலும் பல ஆயிரக்கணக்கான நூல்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

ஆரம்ப விழா நிகழ்வில் இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத் தலைவர் ஆரியதாச வீரமன் இந்தியாவிலிருந்து எஸ். கே. கை சுவர்ண பதக்கம் பெற்ற படைப்பாளி சுனித்ரா இராஜ கருணாநாயக ஆகியோர் கலந்து கொண்டனர்.


இக்கண்காட்சிகள் ஏ. மண்டபத்தில் 80 காட்சி அறைகளும் பி. மண்டபத்தில் 58 காட்சியறைகளும் கொண்டடுள்ளன. முன்பக்க சி. மண்டபத்தில் 25 காட்சி அறைகளும் அமையப்பட்டுள்ளது.

ஜே.கே.எச்.எஸ். ஆகிய மண்டபத்தில் நீண்ட காட்சி அறைகளுமாக சுமார் 450 காட்சி அறைகளில் கண்காட்சி இடம்பெறுகிறது இலங்கையின் பிரபல புத்தக சாலைகளும் பிரசுரங்களும் க[illegible] காட்சிச்சாலையில் தங்களின் பிரசுரங்க[illegible] காட்சிப்படுத்தியுள்ளது.

இங்கு 40 வெளிநாட்டு புத்தகசாலைகள் தங்களின் வெளியீடுகளை காட்சிக்கு வைத்துள்ளன. பல மொழிகளிலும் பல ஆயிரக் கணக்கான நூல்களும் 155 புத்தகசாலைகளின் சுமார் 400க்கு மேற்பட்ட நூல்களும் இந்த ஒன்பது நாட்களில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

## அழகு நகை தயாரிப்பு....






வெளிநாட்டு உற்பத்திகளில் மோகம் கொள்ளும் நம் மங்கையர்கள் நம் நாட்டு உற்பத்திகளைப் பயன்படுத்தும் போது நம் நாட்டுப் பெருமையுடன் நாம் அதிகளவிலான வருமானத்தைப் பெறக்கூடியதாக இருக்கின்றது.

இந்தியாவில் பயிற்சிகளை மேற்கொண்டு தற்போது அரியாலை அருடி பகுதியில் தனது பகுதிநேர வேலையாக அழகு நகை தயாரிப்புக்களை மேற்கொண்டுவரும் திருமதி மஞ்சுளா சிறிரங்கதாஸ் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

இயற்கையின் மகத்துவத்தை இனிதே நாம் பயன்படுத்த வேணடும் அழகுப் பயிற்சிகள் வடிவமைப்புக்கள் கைத் தொழில் கைப்பணிகள் மூலம் மங்கையரின் கைவண்ணம் மூலம் உலகத்தை வியக்கவைக்க குடா நாட்டு மங்கையர்கள் முன்வர வேண்டும்.

மங்கையவர் கை வண்ணம் பாரினிலே பரவும் தென்றல் போல் ஒளிர நம் இளம் மங்கைகள் முயற்சிக்க வேண்டும் நாமும் இக் கலையில் வல்லுனராக வேண்டும் எம்மால் எதையும் சாதிக்க முடியும் எம்மால் முடியாதது ஒன்றும் இல்லை எமது சொந்த வேலைக்கு ஏற்றவாறு விருப்பத்துக்கு ஏற்றவாறு உடைகள், அணிகலன்கள், ஆபரணங்கள் வடிவமைத்து அணிய நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

இயற்கையுடன் இணைந்த உற்பத்திகளையும், இயற்கையின் மூலம் பெறும் கழிவுப் பொருட்கள் மூலமும் பல வகையான அழகிய உபகரணங்களை தயாரிக்க முடியும் எமது தாயாரிப்புக்களை நாமே வீட்டில் வைத்து அழகு படுத்தினால் வீடும் அழகாக இருக்கும் மனதுக்கும் இதமாக இருக்கும்

நாம் எம்மால் இயன்றவரை கைப்பணிப் பொருட்களை தயாரிக்க பழகமுன்வரவேண்டும் தொலைக்காட்சி நாடகங்களில் மூழ்கிப் போகாமல் குடிசைக் கைத்தொழில்கள் பாரிய கைத் தொழில்கள் என பலவகையான கைத்தொழில்களை பயின்று அவற்றின் மூலம் பயன்பெற வேண்டும்.

எமது நாடு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதை விடுத்து எங்கள் நாட்டின் உற்பத்திகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்காக நாம் தயாராக வேண்டும். 30 வருட யுத்தம் முடிந்த பின்னரும் நம் பெண்கள் அடுப்பங்கரையை நாடாது உலகையும், எம தேசத்தையும் அபிவிருத்தி செய்ய பங்களிப்பாற்ற வேண்டும்.

இலங்கையின் முதன்முதலாக அழகு நகை தயாரிப்புக்கள் (Fashion jewellery Making) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இத்தயாரிப்புக்கள் தனிப்பட்ட நபரின் நகைகளின் வடிவங்கள், முத்துக்கள், டிசைன் கற்கள் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

எனவே பல துறைகளில் முன்னேறிவரும் யாழ்ப்பாண மங்கையர்கள் இத்துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி உள்ளூர் உற்பத்திப் பொருட்களை சுயமாகத் தயாரித்து அவற்றுக்கான சந்தை வாய்ப்புக்களை எற்படுத்தி வருமானத்தைப்பெற்று பொருளாதார ரீதியில் உச்சப் பயனை அடையவேண்டும் என விரும்புகிறேன். - சுமித்தி

# காணிக்கான ஆவணங்களைப் பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் மீள்குடியேறிய மக்கள் தமது காணிக்கான ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதில் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வவுனியாவில் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட இரணை இலுப்பைக்குளம், கோவில்புளியங்குளம் மற்றும் பூவரசங்குளம் பகுதிகளில் மீள்குடியேறியவர்கள் காணி தொடர்பான ஆவணங்கள் இன்மையால் இவர்களிடையே காணிப்பிணக்குகள் ஏற்பட்டு வருகின்றது.

இப்பகுதியில் 1972 ஆம் ஆண்டு குடியேற்றத் திட்டத்தின் கீழ் ஒருவருக்கு 2 ஏக்கர் வீதம் வழங்கப்பட்டது. அதற்கான பெமிற எனப்படும் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

தற்போது அந்த பெமிற் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றைப் பயன்படுத்தி காணிக்கான உறுதியைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்ற போதும் கடந்தகால யுத்தம் காரணமாக ஆவணங்கள் அழிவடைந்ததாக அதிகாரிகள் கூறுவதாகவும், இதனால் தாம் அரச மற்றும் தொண்டு நிறுவனங்களின் உதவிகளைப் பெறமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து உரிய அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (54)

## நாவாந்துறை மக்களுக்கு விதைகள், பசளைகள் வழங்கல்

யாழ்.நாவாந்துறை சென். அன்ரனீஸ் சனசமூக நிலையத்தில் விதைகளும், பசளையும் வழங்கப்பட்டன. ஜே/84, ஜே/86, ஜே/87 பிரிவின் கிராம அலுவலர்களின் தலைமையில் இப்பகுதியில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு விதைகளும், பசளைகளும் வழங்கப்பட்டன.

குடும்பப் பொருளாதாரத்தையும், போசாக்கையும் மேம்படுத்தும் 10 இலட்சம் மனைப்பொருளாதார அலகுகளை உருவாக்கும் தேசிய செயற்திட்டத்தை அறிமுகப்படுத்தும் வகையில் இந்த விதைகள் வழங்கப்பட்டன.

இப்பகுதியில் வாழும் பெருந்தொகையான மக்கள் இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக வருகை தந்திருந்தனர். இதில் 3 பகுதி கிராம அலுவலர்களுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகஸ்தர்களும் பங்குபற்றினர். (105)

## குடும்பத் தகராறு காரணமாக நஞ்சருந்தினார் குடும்பஸ்தர்

மந்துவில் பிரதேசத்தைச் சேர் குடும்பஸ்தர் நஞ்சினை உட்கொண்டமையால் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

மந்துவில் பிரதேசத்தைச் சேர்ந்த தேவராஜா (வயது 40) என்பவரே இவ்வாறு நஞ்சு குடிதத வராவார். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினையைத் தொடர்ந்தே இவர் நஞ்சினை உட்கொண்டுள்ளார். இவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எப்.எஸ்)

### சுதந்திர....

யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் அருட்திரு எஸ்.ஏ.றொசான் (ஆசிரியர் பாதுகாவலன்) தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டது. இதன்படி ஊடக குரல் அமைப்பின் தலைவராக இரா.புத்திரசிகாமணி, செயலாளராக, மு.திலிப் அமுதன், பொருளாளராக அ.ரஜீவன், உபதலைவராக அருட்திரு எஸ்.ஏ. றொசான், உப செயலாளராக கோ.றுஷாங்கன் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் 6 பேர் கொண்ட செனட் சபையும் தெரிவுசெய்யப்பட்டதுடன், அவ் அமைப்புக்கான யாப்பும் வரையப்பட்டு பொதுச் சபையினால் ஆமோதிக்கப்பட்டது. நேற்றைய அங்குரார்ப்பண நிகழ்வில் 60 இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் பதிவுசெய்யப்பட்டனர். (105)

### சர்வதேசத்தை...

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19வது கூட்டத் தொடருக்கு முன்னர் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் சாதகமான சமிக்ஞைகளை வெளிப்படுத்த வேண்டும் என சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி தெரிவித்துள்ளார். 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள இக்கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக கடுமையான அழுத்தங் கள் பிரயோகிக்கப்படும்.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழு போலியான தகவல்களைக் கொண்டு தயாரித்த அறிக்கையின் அடிப்படையிலேயே அரசாங்கத்துக்கு எதிரான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

அத்துடன், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு யதார்த்தமான பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும். சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் உண்மை களைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை அமைய வேண்டியது மிகவும் அவசியமானது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### பான் கீ மூனுக்கு....

அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பான் கீ மூன் இந்த அறிக்கையை ஜெனிவாவுக்கு அனுப்பியுள்ளது இலங்கைக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். ஐ.நாவுக்கான இலங்கை தூதரகத்துக்குத் தெரியாமலேயே இந்த விவகாரம் இருட்டில் வைக்கப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

நிபுணர்குழு அறிக்கையை வெளியிட்ட பின்னர், அடுத்த கட்டம் குறித்து அனைத்துலக சமூகம் முடிவு செய்யட்டும் என்று கூறியிருந்த ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன், அதற்கு மாறாக இவ்வாறு செயற்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி விமர்சித்துள்ளார்.

நியுயோர்க்கில் ஐ.நா கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை ஒன்றில் பான் கீ மூன் எடுத்துள்ள முடிவு தொடர்பாக அரசுக்குத் தெரியப்படுத்தப்பட்டதாக கூறப்பட்டுள்ள போதும், நிபுணர் குழுவின் அறிக்கை ஜெனிவாவுக்கு அனுப்பப்பட்ட பின்னரே தூதரகத்துக்கு தகவல் சொல்லப்பட்டதாகவும் வெளிவிவகார அமைச்சு அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

அதற்கு முன்னதாக ஐ.நா முறைப்படி எந்தத் தகவலையும் தரவில்லை என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

## இன்றைய ஆட்டம்

வல்லை ஜங்கமன்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் வருடந்தோறும் நடத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடனும் தினமுரசு நாளிதழ் ஊடக அனுசரணையுடன் நடத்தப்படுகிறது.

இன்றைய ஆட்டமாக பிற்பகல் 3.30 மணிக்கு வல்லை ஆதி சக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கற்கோவளம் உதயதாரகை அணி மோதவுள்ளது. (12)

**ஊடக அனுசரணை: தினமுரசு**

### தெரிவுக்குழு...

அபேவர்தன தெரிவித்திருந்தார். இது குறித்து கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், அப்படியான அழைப்பு எதுவும் கூட்டமைப்புக்கு கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

அதேவேளை தெரிவுக்குழுவிற்கு பிரதிநிதிகளை நியமிக்குமாறு சபாநாயகர், இதுவரை தமக்கு அழைப்பு விடுவிக்கவில்லை என ஜே.வி.பியும் கூறியுள்ளது.

### வாள்வெட்டில்...

திரும்பியுள்ளார்.

இவரை உடனடியாக உறவினர்கள் அச்சுவேலி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் கொண்டுவரப்பட்டு நேற்றுக்காலை 7.30 மணியளவில் வைத்தியசாலையில் நோயாளர் விடுதிக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இறந்தவரின் சடலம் தற்போது யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எஸ்)

### சிரேஷ்ட...

ஊடகங்களுக்கும் இறக்கும் வரையில் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது மறைவுக்கு பல்வேறு பல்வேறு கட்சிகளும் ஊடக அமைப்புக்களும் பொது அமைப்புக்களும் தமது இரங்கலை வெளியிட்டுள்ளன.

# அடிப்படை வசதிகளின்றி இயங்கும் கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முன்பள்ளிகள் போதிய அடிப்படை வசதிகள் இன்றி கஷ்டங்களின் மத்தியிலேயே கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசத்தில் 86 முன்பள்ளிகள், கண்டாவளை பிரதேசத்தில் 36 முன்பள்ளிகளும், பூநகரி பிரதேசத்தில் 43 முன்பள்ளிகளும், பச்சிலைப் பள்ளி 18 முன்பள்ளிகளும் என மொத்தமாக 182 முன்பள்ளிகள் செயற்பட்டு வருகின்றன.

இவற்றில் 30 வீதமான முன்பள்ளிகள் போதிய அடிப்படை வசதிகள் குறிப்பாக கட்டட வசதி, தளபாடங்கள், கற்றல் உபகரணங்கள் என்பன இல்லாமல் மாணவர்கள் நிலத்திலிருந்தும் மர நிழல்களின் கீழ் இருந்தும் கல்வியைக் கற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இம்முன்பள்ளிகளில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாத நிலையில் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் அவர்கள் கல்வியைக் கற்பித்து வருகின்றனர்.

முன்பள்ளி சிறார்களின் கல்வி மேம்பாட்டினைக் கருத்திற் கொண்டு அவர்களுடைய தேவைகளை இனங்கண்டு அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் உதவி செய்ய முன்வரவேண்டும் என பலராலும் தெரிவிக்கப்படுகிறது. (உ-கே)

# குடாநாட்டு வீதி விபத்துக்களில் நேற்று பலர் காயமடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் பல்வேறு பகுதிகளில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்துக்களில் பலர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இளவாலைப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றிரவு 8.00 மணியளவில் இடம்பெற்றது. இளவாலைப் பகுதியைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை ஞானசெல்வன் (20) என்பவரே காயமடைந்தவராவார்.

☆ ☆ ☆

யாழ். மானிப்பாய் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து நேற்று மாலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த கலைச்செல்வன் (24) என்பவரே படுகாயமடைந்தவராவார். சம்பவ தினம் சபாரி ரக மோட்டார் சைக்கிளில் பயணம் செய்துள்ள நிலையில் பிரேக் பிடிமானம் இன்மையால் சறுக்கி வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார்.

விபத்து இடம்பெற்ற வீதி காபற் வீதியாக போடப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

☆ ☆ ☆


நேற்றுக்காலை இணுவில் பகுதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் பண்டாரவளை பகுதியைச் சேர்ந்த முரளி (24), டென்ற் (21) என்ற இளைஞர்கள் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இணுவில் கோவில் வாசல் பகுதியில் ஆட்டோ ஒன்றும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் இளைஞர்கள் இருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். நேற்று மாலை 4.45 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் நல்லூரைத் தற்காலிக முகவரியாகக் கொண்ட டென்சன் (22) இணுவிலை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்ட முரளி (வயது 24) என்பவர்களே படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்கள் இருவரும் பண்டாரவளை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். தொழில் நிமித்தம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விபத்து அதிகே ஓட்டத்தினால் வேகக் கட்டுப்பாடு மீறியதால் இடம்பெற்றதாக பிரதேச தகவல்கள் தெரிவித்தன. (எப்.எஸ்)

செய்திப்பாணம்

**வாழ்ந்தால் வளமொடு வாழவேணு மென்றுதான்**
**நாள்தோறும் முயற்சிகள் நாடினோம் - ஆழ்கடலில்**
**ஆஸ்ரேலிக் கப்பல்களில் ஆயத்தம் செய்கையில்**
**'பாஸ்போட்' இல்லாததாம் பீதி!**



# ஆசிரிய உதவியாளராக உள்ளவர்கள் நிரந்தர நியமனம் வழங்க கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள் தமக்கான நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாகவும், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கு தம்மை உள்வாங்குவது குறித்தும், நேற்றைய தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து தமது கோரிக்கைகளை முனவைத்தனர்.


யாழ். மாவட்ட பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தவர்கள் கடந்த 2009 ஆம் ஆண்டு அரசினால் ஆசிரிய உதவியாளர்களாக உள்வாங்கப்பட்டு அவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவாக மூவாயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் தமக்கான நிரந்தர நியமனம் மற்றும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கு உளவாங்குவது தொடர்பாகவும் அமைச்சரிடம் நேற்றைய தினம் தமது கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்தனர்.

கோரிக்கைகளை ஆராய்ந்த அமைச்சர் கல்வியமைச்சிற்கு இப்பிரச்சினை எடுத்துரைக்கப் பட்டதாகவும் கல்வியமைச்சர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் போது இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாட இருப்பதாகவும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை மீளவும் இயக்கி அதனூடாகவும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையூடாகவும் டிப்ளோமா பயிற்சி நெறியை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் உறுதிபடத் தெரிவித்தார்.

இதன்போது ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்

# அரச நிறுவன ஊழல் மோசடிகள் நாள்தோறும் 25 முறைப்பாடுகள்



(கொழும்பு)

அரசாங்க துறைகளில் இடம் பெறும் பல்வேறு ஊழல், மோசடிகள் குறித்து தினமும் சுமார் 25 முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக இலஞ்ச, ஊழல் குற்றச் சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக் குழுவின் தலைவரும் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசருமான ஜகத் பாலபட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

கிடைக்கும் முறைப்பாடுகளின் அடிப்படையில் தேடுதல்கள் நடத்தப்படுகின்றன என தெரிவித்த அவர், பணத்தை வட்டிக்கு கொடுத்தல் போன்ற இலஞ்ச சட்டத்திற்கு உட்படாத விடயங்கள் குறித்தும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆணைக்குழு இயங்காது இருந்த காலத்தில் செய்யப்பட்ட 3 ஆயிரத்து 700 முறைப்பாடுகள் சம்பந்தமாகவும் ஆணைக்குழு மீண்டும் இயங்க ஆரம்பித்த கடந்த மே மாதம் 15 ஆம் திகதி முதல் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பாலபட்டபெந்தி குறிப்பிட்டுள்ளார். இலஞ்ச ஆணைக்குழுவை 1954 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு முறைப்பாடுகளை செய்யமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

# வடகிழக்கு கடல்வள அபகரிப்பு; தடுத்து நிறுத்த நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிராந்திய மீனவ மக்களுக்கு உரித்தான மீன் வளங்களை இந்திய மீனவர்கள் அபகரித்துச் செல்லாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ராஜித்த சேனாரட்ன உறுதியளித்துள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு செயலாளருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கை கடலோரக் காவல் படையினரால், நாட்டு எல்லைக்குள் வரும் வெளிநாட்டு மீனவர்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மற்றும் மன்னார் பிரதேசங்களில் மீனவ சமூகங்களை அண்மையில் சந்தித்து கலந்துரையாடிய போதே மீன்பிடித் துறை அமைச்சர் இந்த விடயங்களை தெரிவித்திருந்தார்.

இதேவேளை, இந்தியாவினால் கைதுசெய்யப்படுகின்ற



இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்கு மீன்பிடி மற்றும் கடல்வளத் துறை அமைச்சு திறனான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என அமைச்சின செயலாளர் தமிதாடி சொய்சா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கைது செய்யபபடுகின்ற இந்திய மீனவர்கள் இலகுவில் விடுவிக்கப்படுகின்ற போதும், இலங்கை மீனவர்கள் அவ்வாறு விடுவிக்கப்படுவதில்லை.

சர்வதேச தரத்திற்கு அமைய மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தருணத்தில், சர்வதேச கடல் எல்லைக்குள் வெளி மீனவர்கள் வரும் பட்சத்தில் அவர்களை தடுப்பதற்கும், மீறும் பட்சத்தில் கைது செய்வதற்கும் இயலுமாக உள்ளது.

இருந்த போதும் அவ்வாறு கைது செய்யப்படுபவர்களை உரிய சட்டநடவடிக்கைகளின் அடிப்படையில் இரண்டு தினங்களுக்குள் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

எனினும். இலங்கை மீனவர்கள், அந்தமான் தீவுகள், இந்தியாவின் ஒரிசா, பீகார், போன்ற பிராந்திய கடல் எல்லைகளில் வைத்து கைது செய்யப்படும் போது நீண்ட காலத்தின் பின்னரே விடுவிக்கப்படுகின்றனர்.

இது இந்திய மத்திய அரசினதும், மாநில அரசுகளினதும், சட்டதிட்டங்கள் மாறுபட்டுள்ளமையே காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்திய கரையோர பாதுகாப்புப் பிரிவு இலங்கை மீனவர்களை காப்பாற்றியது



சர்வதேச கடற்பரப்பில் நிர்க்கதியான இலங்கை மீனவர்களை ஏற்றிய படகொன்றை இந்திய கரையோர பர்துகாப்பு பிரிவினர் காப்பாற்றியுள்ளனர். இந்தப்படகில் கடந்த ஓகஸ்ட் மாதம் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக அதிலிருந்த மீனவர்கள் சர்வதேச கடற்பரப்பில் நிர்க்கதியானதாக கடற்றொழில் திணைகளத்தின் தேடுதல் நடவடிக்கை பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னையிலுள்ள இலங்கை பிரதி உயர்ஸ்தானிகராலயத்திற்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அந்த நாட்டின் கரையோர பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கை மீனவர்களை காப்பாற்றியுள்ள்னர்.

சசங்க இரண்டு எனும் குறிப்பிட்ட படகு தற்போது ஆந்திர மாநிலத்திற்கு கொண்டு செல்லப் பட்டுள்ளது.

இந்தப் படகில் ஐந்து மீனவர்கள் இருப்பதாகக் கடற்றொழில் திணைக்களத்தின் தேடுதல் நடவடிக்கைப் பிரிவு குறிப்பிட்டுள்ளது

# இந்தியாவில் பாரிய பூகம்பம்; 12 பேர் பலி இராணுவ பதுங்கு குழிகளும் பாதிப்பு



இந்தியாவின் சிக்கிம் மாநிலத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 6.8 ரிச்டர் அளவிலான பூகம்பம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியல் ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

நேபாள மற்றும் சீன எல்லையிலுள்ள சிக்கிம் மாநிலத்தில் ஏற்பட்ட பூகம்பத்தினால் இந்த இந்தியாவில் 7 பேரும் நேபாளத்தில் 5 பேரும் பலியாகியுள்ளனர். இந்தியாவில் சிக்கிமில் நால்வரும் பீகாரில் இருவரும் மேற்கு வங்க மாநிலத்தில் ஒருவரும் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பூகம்பத்தினால் சீன எல்லைப் பகுதியிலுள்ள இந்திய இராணுவத்தின் பதுங்கு குழிகளும் பாதிக்கப்பட்டதாகவும் படையினர் பலர் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# நோயாளியுடன் வந்தவரின் கைத்தொலைபேசி பறிபோனது




யாழ். போதனா வைத்தியசாலையில் விபத்தொன்றில் காயமடைந்த ஒருவரை அழைத்துவந்த ஒருவரின் பெறுமதியான கைத்தொலைபேசி களவாடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று இரவு 9.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது. கைத்தொலைபேசியைப் பறிகொடுத்தவர் வலிகாமம் வலயக்கல்விப் பணிமனையில் பணியாற்றுபவர் எனவும் நேற்று முன்தினமே குறித்த கைத்தொலைபேசியைக் கொள்வனவு செய்ததாகவும் தொலைபேசியைப் பறிகொடுத்தவர் மனம் வருந்தினார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எப்.எஸ்)

# மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் காயமடைந்தவர்கள் கவலைக்கிடம்



(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம், தாவடிப் பகுதியில் நேற்று இரவு இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதிக்கொண்ட விபத்தில் நான்கு இளைஞர்கள் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் மருதனார் மடத்தைச் சேர்ந்த சுமன் (வயது - 21), ஜோன்சன் (வயது - 22) மற்றும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களுமே படுகாயமடைந்தவர்களாவர்.

சபாரி ரக மோட்டார் சைக்கிளும், பல்சர் ரக மோட்டார் சைக்கிளும் மோதி விபத்திற்குள்ளானது இதில் சுமன் என்பவரும், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களும் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர். (எப்.எஸ்)

# யுத்தம் முடிவடைந்துள்ள நாட்டில் புதிய படைமுகாம்கள் தேவையில்லை

## கரு ஜயசூரிய கூறுகிறார்



(கொழும்பு)

யுத்தம் முடிவடைந்துள்ள நாட்டில் படைமுகாம்கள் அமைக்கப்படும் அவசியம் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் நேற்று முந்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். தற்போது நாடு செல்லும் விதத்தை பார்க்கும்போது, நாட்டின் எதிர் காலம் எந்த திசையில் செல்கிறது என்பது குறித்து சிந்தித்து பார்ப்பது சிரமாக உள்ளது.

நமக்கு பின்னர் வரும் எதிர் கால சந்ததியினருக்கு ஜனநாயக நாடு ஒன்றின் வாழும் உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

வடக்கு கிழக்கிற்கும் காவற்துறை அவசியம், எனினும் சர்வாதிகார நாடுகளே இராணுவம் முகாம்களை அதிகமாக திறக்கின்றன.இலங்கை தற்போது சர்வாதிகாரத்தை நோக்கி பயணித்து வருகிறது. இது குறித்து நாம் இந்த சந்தர்ப்பத்தில் எச்சரிக்கை விடுக்கவேண்டும் எனவும் மேலும தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 செப்ரெம்பர் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.